

மதுரகவி இ. நாகராஜன்

எழுதிய நூல்கள்

நிறைநிலா (சிறுகதைத் தொகுதி)
சிறுவர் பாடல்
சிலம்பு சிரித்தது (கவிதைநாடகம்)
வாழ்க்கை ஒரு வசந்தம் (நாவல்)
குயில் வாழ்ந்த கூடு (காவியம்)

கூட்டாக எழுதிய நூல்கள்

மத்தாப்பு (நாவல்)
நீதிக்கரங்கள் (காவியம்)

அடுத்து வெளிவருவது

சத்தியம் நிலைக்கும் (சிறுகதைத் தொகுதி)

# குயில் வாழ்ந்த கூடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயில் வாழ்ந்த கூடு

ஆசிரியர் :
மதுரகவி இ. நாகராஜன்

கிடைக்குமிடம் :
உதயம் புத்தக நிலையம்
431, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு : மே 1972.

அச்சுப்பதிவு :
டொலர் பிரிண்டர்ஸ்
யாழ்ப்பாணம்.

சகல உரிமைகளும் ஆசிரியருக்கே

விலை: ரூபா 2-00

உ



அன்பால் மதுரகவி
என்னுமுயர் பட்டத்தை
என்பால் இசைந்தருளி
என்னிதயம் நிற்கின்ற
யாழ்ப்பாணம் கோட்டை
வெளியினிலே கோவிலுற்ற
அப்பன் முனீஸ்வரனின்
அன்பு மலரடிக்கே
இப்பாநூல் அர்ப்பணமாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இதயம்

என்னுளத்தின் கற்பனையால்
கருவொன் றிங்கே
எனையறியா விதத்தினிலே
முளைத்து முற்றி
கன்னலிசை பொழிந்துலகை
ஈர்த்த நல்ல
கலைகொண்டோன் நெஞ்சத்தின்
நிலையும் சேர
இன்னூலாய் ஆகிற்றும்;
அன்போ டேற்பீர்!
இங்கூக்கி உதவிகளைத்
தந்தோர்க் கெல்லாம்
முன்னுரைத்தேன் நன்றியினை.
அவர்கள் எல்லாம்
முன்னவனின் துணைகொண்டே
இனிது வாழி!

2, முதலாம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
2 - 5 - 1972

மதுரகவி இ. நாகராஜன்



## கடவுள் வணக்கம்

கும்பிட்டேன் நான் தலையிற்
குட்டிக் குனிகின்றேன்
தும்பிக்கை கொண்டோய்!
துணையாவாய். — நம்பிக்கை
காட்டிக் கலைவாணி
கன்னற் சுவைத்தமிழில்
பாட்டைத் தருவாய்!
பரிந்தூக்கிக் — கோட்டைவெளி
நிற்கும் முனியப்பா
நேராய் மதுரகவிச்
சொற்கு விருப்பாய் துணை.

## தமிழ் வாழ்த்து

கரும்புமுக் கனியின் சாற்றைக்
காய்ச்சிய பால்தேன் சேர்த்து
அரும்பெரும் கவிதை யாக்கி
அம்புவிக் கீவ தற்கே
விரும்பினேன்; தமிழாம் தாயே!
வித்தையில் மூத்தோர் நெஞ்சில்
அரும்பிய பொருளை அன்பால்
அருளுக என்பால் வந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதையின் பிறப்பு

"ஓங்கார மந்திரமே உண்மை; மேலாம்
  உறுதிதரும்; உயர்நெறியும் அதுவே; என்றும்
ஈங்கிதனை இதயத்தில் இருத்தி வாழ்வோர்
  ஈசனது நேசத்துக் குரியர்" என்றே
பாங்கமைந்த அலைசுருதி லயத்தோ டொன்றிப்
  பாடுகின்ற கடலதனின் கரையின் ஓரம்
ஆங்காரம் கொண்டவுளம் அமைதி காண
  ஆயிரமாய் வந்தார்கள் அவ்வூர் மாந்தர்.

நீலநிறத் திரையான ஆகா யத்தில்
  நிகரற்ற பலவர்ணக் கலவை கொண்டு
கோலஎழிற் கோடுகளை வரைந்து சின்னக்
  குழந்தையெனப் பகலவனும் தவழு கின்றான்
மேலைவான் படுகுழியில் விழுவா னென்ற
  வேதனையை அறிந்ததனால் வேலை யிங்கே
ஓலமிடு கின்றதுவோ? என்றன் உள்ளம்
  ஊறிவரும் உவமைகளோ பலவா கிற்றாம்.

ஓடிவரும் ஓரலையாம், அதனின் பின்னே
  உருண்டுவரும் இன்னொன்று, நுரத்தி யப்பால்
கூடிவரும் வேறொன்று குமுறிப் பாய்ந்து
  குன்றாகிப் பலதலைகொள் பாம்பாய்ச் சீறிச்
சாடிவரும் வேறொன்று, 'மனித நெஞ்சின்
  சலனத்துக் கிங்குவமை நாமே' யென்று
தேடிவரும் மனிதருக்கே செப்பு மாப்போல்
  திரைவந்து கரைசித்திப் பாடு தாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருட்டியினைச் செய்கின்ற பிரம னாகி
சிறிதேனும் நிற்காதங் கடுத்த டுத்து
உருள்கின்ற அலைகளுடன் உள்ளீ டாகி
ஒன்றல்லப் பலகோடி சிப்பிக் கூட்டம்
திரண்டுகரை யடைந்திறைவன் சிருட்டி மேவும்
சீருக்கே நேரில்லை என்று காட்ட
புரண்டதுவாம் என்மனது புவன மீதில்
பொருந்தியுள மனிதர்களின் வாழ்வை நோக்கி.

துன்பமதற் கெல்லையில்லை யென்றே யிங்கே
துடிக்கின்ற கடலலைகள் காட்டச், சிப்பி
இன்பமந்தத் துன்பமதின் இடையே இன்னும்
இருக்கிறதாம் 'ஏமனிதா! இதய முற்ற
துன்பத்தைக் கண்டேன்நீ சோரு கின்றாய்?
துலங்குகிற இன்பம்பின் உள்ள தென்றே
உன்புன்மை கொண்டவறி யாமை யாலே
உணராமல் வருந்துகிறாய்' என்றே ஓதும்.

கடல்மீது கண்பாய கருத்தோ நெஞ்சிற்
கனத்திந்தப் படிமிசையில் விடிவே யற்று
உடல்மீது கொண்டவுளப் பற்றி னாலே
உண்பதனை உறங்குவதை பெரிதே யாக்கி
மடமையிலே வாழ்கின்றோம் என்ற உண்மை
வளர்கிறதாம்; கடலிருந்தோ இனிய காற்றென்
உடல்தடவி 'நண்பாநீ உலகத் தோடே
ஒன்றித்தா னிருக்கின்றாய்' என்றே சொல்லும்.

கரையிருந்தே உடல்மீது கண்பு தைத்தேன்;
கருத்துகளோ பெருத்தனவாம்; வைய கத்தில்
வரையற்ற வாழ்வுக்காய் உழைத்தி ளைத்து
வருந்துகிற மனிதரெலாம் முடிவி லோர்நாள்
இரைந்துவந்து கரைசிந்தி ஆண வத்தை
இழந்தில்லா தாகின்ற திரைகள் ஈற்றில்
நுரையாகிப் போவதொப்ப உடல் முற்ற
நோயதனால் பாய்விழுந்தே அழிவா ராமோ?



எண்ணத்தை விதிகாட்டும் தத்து வத்தில்
இசைவுபெற விடுத்தேனிவ் வுண்மை தன்னை
விண்ணாளும் இறைவனன்றி வேறுள் ளார்கள்
விளங்குவரோ? விளக்கமதைக் காணேன்; மீண்டும்
மண்ணினையென் மனம்படிய மணலிற் குந்தி
வந்துள்ள மனிதர்களைப் பார்த்தேன், என்றன்
எண்ணத்தைத் தன்வயமே இல்லா தாக்க
எதிருற்ற உருவிலென்றன் கண்ணோ டிற்றாம்.

ஓடியகண் பாவியஅவ் வுருவம் என்போல்
இவ்வுலகின் மனிதனன்றி வேறொன் றில்லை;
பாடுபல பட்டதனால் படிவ முற்ற
பாங்கிழந்தே இனிமேலும் வாழ்வ தற்கே
கூடாத வெறுங்கூடாய்; சருகாய்ப் போன
கொடியாகிக் கோலூன்றி அசையக் கண்டு
வாடியதாம் என்னெஞ்சம்; ஆனால் என்ன?
வையத்தில் இல்லாத புதுமை யல்ல.

குழிவிழுந்தே உள்ளுறையும் கண்கள், கற்றைக்
குழல்சரிந்து நரைபாய்ந்து பிடரி தொட்டே
அழகிழந்தாங் கரிமாவின் தோற்றம் போல
அடர்ந்துளது, பால்நுரைபோற் தாடி, துன்பம்
பழகுகின்ற உள்ளத்தைப் படம்பி டித்துப்
பக்குவமாய் காட்டுகின்ற அவன்மு கத்தில்
களையில்லை; ஆனாலும் முன்னைக் கால
கட்டழகின் தொட்டகுறை காண்கின் றேனே.

நெஞ்சமதை நேத்திரத்தை கடல்மீ தாக்கி
நினைவுகளை நெருடுகின்ற கடந்து போன
வஞ்சகத்தை நஞ்சதனை மீட்கின் றானோ?
வரண்டுவிட்ட வாழ்வினிலே முன்னைக் கால
கொஞ்சும்எழில் மிஞ்சவரும் இளமை தன்னை
கொடுமைக்குள் ளாக்கியவன் கூனிக் கோலத்
தஞ்சமெனக் கொண்டுடலைத் தாங்கி னானோ?
தாற்பரியம் எதனையுமே அறியேன் நானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனையொத்த மனிதனவன் கோலே யூன்றி
என்னருகில் வந்திருந்தான்; பேச்சோ இல்லை
கனைக்கின்ற கடலதனிலே கண்புதைத்துக்
காலத்தைக் கணக்கெடுக்கும் யோகி ஒப்ப
நினைக்கின்ற செயலிழந்தான், அவன் நெஞ்சத்தில்
நிலவுகின்ற உண்மையை நான் ஆயும் வேளை
எனைத்தாண்டி வந்த இளம் பெண்கள் சில்லோர்
எட்டியடி வைத்தபடி எதையோ பார்த்தார்.

அருகினிலே மணல்மேட்டை மருவி என்றும்
அந்தியிலே வருவோர்தம் விழிகளுக்கே
தெரிந்திடவே வேண்டுமெனச் சினிமாக் காரர்
திடமான கம்பமொன்றில் நாட்டி வைத்த
ஒரு பலகை உண்டதிலே ஒட்டி யுள்ள
திருமுருகன் படமதனைக் கண்ட பெண்கள்
விரிவான புகழுற்ற நடிகன் பேரை
வியந்தபடி மணல்மேட்டில் இருக்கின் றார்கள்.

முதிர்ந்தவொரு கிழவியங்கே வந்தாள்; கண்ணில்
முருகனுரு தென்படவே நின்றாள், நெஞ்சில்
புதிதான கருத்தறியாள் புராணந் தந்த
புண்ணியத்தின் கண்ணியத்தில் உற்ற பற்றால்
அதுசினிமா நடிகனென அறிந்தி டாமல்
"அப்பாஎன் முருகா நீ காக்க" என்றாள்
இதுகண்டே இளம்பெண்கள் கூட்டம் இங்கே
ஏமாந்தாள் கிழவியெனச் சிரிக் கலானார்.

"என்னஇங்கே" அதிசயமாம் கிழவி கண்டாள்
இதயத்தின் பக்தியினால் முருகா என்றாள்
கன்னியர்கள் கண்டார்கள் சிரித்தார், கண்காண்
காட்சியிலே பேதமுண்டாம்; மனத்தின் மாட்சி
தன்னிலைக்குள் ஏனகிழம் உண்மை கண்டாள்
நயந்துவியந் திதைதுதித்தாள், முருக னாக
முன்னாளில் ஒருவனிவ்வூர் மேடை வந்தால்
முழுப்பேரும் முருகனென்றே இறைஞ்சி நின்றார்.



தனக்குள்ளே அம்மனிதன் நினைந்த கூற்றை
தாங்கிடவே ஆகாது வாயாற் சொன்னான்.
எனக்கதனின் பொருளதனில் விளக்க மில்லை.
என்னசெய்கின் றானென்றே அவனைப் பார்த்தேன்;
தனக்குரிய உணர்விழந்தே முருகன் வேடம்
தாங்கியஅந் நடிகனையே பார்த்து நின்றான்;
மனக்கதவின் உள்ளிருக்கும் நிகழ்ச்சி தானே
வாய்மொழியாய் உருப்பெற்று வெளியே தாவும்.

இப்படியே நான்எண்ணி மெதுவாய்ச் சென்று
இவ்வுலக நினைவதனை இழந்து நின்றோன்
கைப்பிடித்தேன், காந்தமதில் பட்ட [illegible]போல்
கண்ணிரண்டும் திரண்டிடவே பயந்தே நின்றான்.
"தப்புடையான் என்றெனை கருத வேண்டாம்
சஞ்சலமே உற்றுள்ளீர் உன்னூ ரென்ன?
இப்பகம் வந்தசெய்தி? படத்தைப் பார்த்தேன்
ஏங்குகின்றாய்?" என்றவனை இனிதே கேட்டேன்.

பற்றியவென் கையுணர்வும் பகர்ந்த சொல்லும்
பரிவூட்டி நின்றிடவே முகத்தை அன்னான்
சற்றங்கென் பக்கத்தே திருப்பி, நெஞ்சச்
சஞ்சலமே முகமேவ அமைதி யாக
'எற்கோநீர் எனைப்பற்றி அழைத்தீர்' இந்த
இருநிலத்தில் பரிவதனை இழந்தோனை மீது
பற்றுற்று வருந்துகிறீர் கயவ னென்றன்
படிவத்தில் தெரியலையா கொடியோன் என்றே.

பெருமூச்சை உதிரவிட்டே அவன் மொழிந்த
பேச்சதனுள் கலந்துள்ள துன்ப மூச்சின்
கருத்ததனை நானுணர்ந்தே "வைய கத்தில்
கயவனென ஒருவனிலை; கடவுள் நம்மை
உருவமதில் ஒன்றாகப் படைத்தார்; உண்மை
உணர்ந்திருக்கும் தத்துவத்தின் வேறு பாடும்
தருணமதும் நமைமாற்றும் கருவி யாகத்
தந்துள்ள நிலையதனை உணர்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிநான் அவனுக்கே உரைத்தேன் அன்னான்
இருவிழியில் பெருகியநீர் துடைத்தே, ஐயா!
தப்பதனை பெரிதாக்கி தயவே இன்றி
தருமத்தை மதியாதார் வாழு கின்ற
இப்புவியில் புதுமையுடன் இறைவன் எண்ணம்
இசைந்துள்ள உமதுரையைக் கேட்டேன்; இங்கே
கைப்புற்ற என்கதையே பெரிதாம் உங்கள்
காலத்தை வீணாக்கக் கருத வேண்டாம்.

உள்ளத்தில் கனக்கின்ற துன்ப மென்னும்
உட்சுமையை பிறர்க்குரைத்தால் குறையும் வாழ்வில்
பள்ளமதும் மேடதுவும் பண்டு தொட்டே
படர்ந்துவரும் பாதையிலே உண்டாம், நெஞ்சம்
கொள்ளுகுறை கொடுக்கின்ற வாதை மேனி
கொள்ளுகின்ற நோயினிலும் கொடிதாம் என்பால்
மெள்ளவுன்றன் வாழ்க்கையினை விரித்துக் கூறு
விரும்புகின்றேன் பொறுமையையும் உடையேன்
என்றேன்

அரிதான வாழ்க்கைதனை அறிந்தி டாமல்
அகம்மேவும் ஆசையினால் மிருக மாகிச்
சரியான பாதையினின்றும் தவறிக் கெட்டே
தருமத்தைத் தள்ளியவன் நானே நெஞ்சில்
உரியகதை யாலுமக்குப் பயனோ இல்லை
உலுத்தனெனைப் புரியாமல் கருணை வைத்தேன்
அரிதான நேரத்தை அவஞ்செய் கின்றீர்
அதனாலே ஒருபயனும் ஆவ தில்லை.

சொல்லப்பா எதையும்நான் தாங்கிக் கொள்வேன்
சோர்வெனக்கே இல்லையுனைப் போல நானும்
தொல்லுலகில் பலர்கதையை கேட்ட துண்டு
துயரத்தில் இசைந்தகதை வாழ்க்கை ஆற்றில்
செல்லுகிற மற்றவர்க்கே பாட மாகும்
சிந்தனையை வழிப்படுத்தி சொல்வாய் என்றேன்
அல்லலுற்ற அவன்கதையை இங்கே காணீர்
அனுபவத்தில் இசைந்தநிலை அறிந்து கொள்ளீர்!

# குயில் பிறந்த கூடு

ஆண்டுகளில் எண்பதனைப் பின்னே தள்ளி
அந்நாளை உலகத்தை முன்னே காண்பீர்
ஆண்டவனின் அருள்நெறியைப் பொருளாய்க்
கொண்டே
அயலுறவை அன்புடனே பேணிச் சீலந்
தாண்டாத தகைமையுற்ற பதியாம் ஈழத்
தலையான யாழ்ப்பாணக் குடாநாட் டைச்சேர்
மாண்டகுமை மிக்கஒரு கிராமம் எங்கள்
மருதலயல் அதையும்நீர் மனதிற் கொள்வீர்.

ஊரினிலே உண்மையென உயர்ந்து நிற்கும்
ஒருகோயில் மயிலேறும் பெருமான் கோயில்
ஏரினையே கைப்பிடித்துப் பாரைப் பேணி
இல்லாதார்க் கீந்துநிறை வெய்தி ஞான
வேராகிக் கிளைத்தவொரு குடும்பம் பூத்து
வெற்றியினை உற்றவுயர் குணத்தின் சீலர்
ஏரம்பர் என்றிட்டால் ஈழ நாட்டில்
இசையோடு கலையறிவார் இதயம் பூக்கும்.

ஏரம்பர் என்றாலே சைவத் தோடெம்
இன்தமிழும் எழில்பெறுமாம் கலையைப் போற்றிச்
சீரமைய அதைப்பேணச் சிந்தை வைத்தார்
தெய்வத்தை உய்வதற்கு முதலாய்க் கொண்டார்
நேரான வாழ்விற்கோர் நிலைய மானார்
நீதிவழி நின்றுமுன்னோர் ஓதி வைத்த
பாரியநற் பாதையிலே படர்ந்தார் அந்தப்
பண்பாளன் ஒருமைந்தன் கந்தை யாவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா வென்பாரும் காளை யாகி
காலத்தின் கோலமுற்றார்; பெற்றார் போற்றச்
சிந்தையிலே சிவம்பேணி சீர்மை பெற்ற
சீலமணி என்பாரின் கைப்பி டித்தார்
நந்தமிழர் போற்றுகிற வள்ளு வன்சொல்
நன்னெறியின் வேரினிலே இணைத்த பண்பில்
இந்தவிதம் தான்வாழ வேண்டு மென்ற
இலக்கணத்துக் கிலக்கியமாய் விளங்கி னாரே.

அன்பினையே உயிராக்கி அதனோ டொன்ற
அழகினையே உருவாக்கி மயன்என் பானும்
தன்பணியை தரணியது மெச்சப் பெண்ணாய்த்
தந்தவளாம் சீலமணி, தமிழோ டார்ந்த
இன்பவிசை இயலுடனே நாட கத்தின்
இயல்பறிந்த தமிழ்ப்பெண்ணாய் வாழ்ந்தாள் அந்த
அன்புருவின் மின்வயிற்றில் அவத ரித்தேன்
அடியவன்நான் என்பெயர்சா ரங்க னாகும்

வட்டிலிலே சோற்றையிட்டே அன்னை நாளும்
வளர்கின்ற வான்மதியைக் காட்டி, அன்பைக்
கொட்டியுண வுடன்பிசைந்து குழைத்தே இன்பம்
கூட்டுகிற மொழியுடனே ஊட்டிப் பின்னர்
தொட்டில்தனில் இடுவாள்நான் தூங்கு தற்காய்
தூயதமிழ்ப் பாடல்களை இசைப்பாள் நானோ
கட்டற்ற வளத்துடனே வளர்ந்தேன் அன்னை
காதலுளம் தருகின்ற கலையும் உண்டேன்,

கலையினுயிர் நிலையறிந்த அன்னை சொல்லோ
கற்கண்டாய்த் தித்திக்கும் அன்பால் என்றன்
நிலையறிவாள் ஒருநிமிட நேர மேனும்
நெஞ்சறிய அவள்பிரிய மாட்டாள்; இந்த
உலகுரிய வுணர்வதனை உணராள்; என்சொல்
உண்மையதாம்! திண்மைபெறு பற்றுற் றென்னை
பலகலையின் தனியுருவாய் ஆக்கி வைக்கப்
பகலிரவாய் அவள்முயன்று பேணி வந்தாள்.



அன்பினையே அமுதாக்கி அருந்த வைத்தாள்
ஐந்துவய தானவுடன் ஆன்றோர் மெச்சும்
இன்பிசைந்த செந்தமிழிற் பாடஞ் சொல்லி
இவ்வுலகில் ஒத்தவழி நடக்க வைத்தாள்
துன்பினையே தெரியாத சுதனாய் இன்பம்
துய்த்தேழு வயதினையே அடைந்த போது
வன்புமலி வையகத்தை ஒருவி அன்னாள்
வாழுகின்ற வயதினில்வான் உலகம் சென்றாள்.

நிறைநிலவின் குளிர்நிழலாய் நெஞ்சம் கொண்ட
நீண்டமகிழ் வழிந்ததையா வாழ்க்கை வானில்
கறையிருளும் கவ்விடவே அமைதி யென்ற
கண்ணிழந்த குருடனென ஆகிப் பொய்யின்
குறைமருவும் இதயமுடன் குமுற லானேன்;
குணமுடைய தந்தையர்தம் பருவத் துற்ற
நறையின்பம் நண்ணிடவே முனைந்த தாலே
நாதியற்றுப் பேதலிக்கும் நிலைக்குள் ளானேன்.

அன்னையென்ற ஒருஜீவன் இல்லை யானால்
அப்பனொரு சித்தப்பன் ஆவான் என்றே
பன்னியுள்ள முதியோர்தம் பழமை வாக்கு
பாழாவ தில்லையந்த வாக்குக் காளாய்
இந்நிலத்தில் என்தந்தை யானார்; நெஞ்சம்
இசைந்துவரும் மோகத்திற் கிசைந்த பெண்ணை
அன்னையரின் தானத்தில் அமர்த்தி விட்டார்
அந்தோநான் பட்டவின்னற் களவே யில்லை.

குற்றங்கள் பலகூட்டிக் கோளும் ஆக்கி
குறைகண்டே நிறைவில்லாச் சித்தி, தன்மேல்
பற்றுவைத்த தந்தைக்குப் பகர்வாள்; அன்னார்
பகுத்தறிய முயலாமல் பதில்கேட் காமல்
சற்றேனும் சுயசிந்தை இல்லா ராகி
சம்சாரம் வார்த்தையினைத் தலைமேற் கொண்டே
குற்றமொன்றும் இல்லாத போதும் என்னைக்
கொடுமைகளுக் காளாக்கி வந்தா ரையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றஅன்னை பேணியெனக் கன்பு காட்டி
பெருநிலத்தில் ஊட்டியநற் பாலினோடே
உற்றஇசை ஞானமென்றன் உள்ளந் தன்னில்
ஊன்றிநல்வேர் கொண்டதனால், இசையின் மீது
பற்றுமிகக் கொண்டதனைப் பயிலு தற்குப்
பலவழியில் யான்முயல்வேன்; சித்தி அந்தப்
பற்றதனைப் பாழாக்க முயன்று வந்தாள்
பயனையவள் கண்டிடவே முடிய வில்லை.

இசையென்ற கலைக்குநிகர் உண்டோ? இல்லை
இசைக்கிசைவான் இறைவனந்தப் பெருமை மிக்க
இசைக்கேநான் இசைந்துவிட்டேன் என்னைத் தாக்கும்
இடரதனை மறந்தைக்யம் ஆனேன், நெஞ்சை
அசைக்கவரும் துயரமதை ஆண்டவன் மேல்
அமைந்தஅருட் பொருட்பாவின் கருத்தையெல்லாம்
இசைக்கின்ற போதுமறந் தின்பம் கண்டேன்
இதுவொன்றே எனதுயிரை நிறுத்திற் றாமே.

ஊரிலுள்ள கோவிலிலே காலை வேளை
உதயத்துக் கிசைந்தபூ பாள ராகம்
சீரமைந்த நாதஸ்வரக் குழலில் மேவத்
தென்றலதைத் திருடிவந்தென் செவியிற் சேர்த்தே
வேராகும்; பின்னென்றன் சாத கத்தால்
விதவிதமாய்க் கிளையாகும் வாழ்வி லுற்ற
போராட்டம் தனைமறப்பேன் பொல்லாத் துன்பப்
போக்கிடுந்த நல்லமைதி பூக்கு மாமே.

போட்டிமனப் பான்மையுடன் இசையில் மிக்க
புகழ்பூத்த கலைஞர்களை அழைத்தே யெங்கள்
நாட்டிலுள்ள கோவில்களில் நிகழ்ச்சி வைப்பார்.
நான்சபையின் முன்னாலே இருப்பேன் நல்ல
தேட்டமென அவ்வறிஞர் கலைச்செல் வத்தை
சிந்தையிலே தேக்கிடுவேன்; தனித் திருந்தே
வீட்டினிலே மீட்டதனை மேலும் மேலும்
விருத்தியினைச் செய்திடவே முனைவேன் நாளும்.



இயற்கையிலே எனக்கமைந்த இசைஞா னத்தை
எவ்வழியும் உயர்த்திடவே எண்ணிச் செய்யும்
முயற்சியினை ஊக்குவிப்பார் வீட்டி லில்லை
முட்டுடனென் உள்ளத்தை கருக்கிச் சாம்பி
அயர்ச்சிபெற செய்திடவே சித்தி என்றன்
அப்பருக்குச் சோள்சொல்வாள் அவள்வாக் கொன்றே
உயர்ச்சியதாம் அவருக்கு, அதனால் பன்னாள்
ஒப்பற்ற வேதனைக்கும் ஆளா யானேன்

காலையிலே ஒருநாள்நான் வீட்டி லுள்ளார்
கண்விழித்தே எழுவதன்முன் எழுந்தே ஊரின்
சாலையினைப் பார்த்திருக்கும் திண்ணை மீது
சப்பாணி போட்டிருந்தே ஸ்வரங்கள் சேரக்
கோலமுறக் குரலெடுத்துப் பாடும் போது
"கோட்டானே காலையிலே குழறு தெங்கன்
வேலையெல்லாம் பாழாச்சு" என்றே சித்தி
வேதனையே நான்கொள்ளத் திட்டித் தீர்த்தான்

அதுகேட்டென் அப்பருமே எழுந்தார் ஆசைக்
காட்பட்ட மனைவியுரை அமுத மாக
எதுவுமெனைக் கேட்கவில்லை "எந்த நாளும்
இவ்வீட்டில் இழவதுவா? அந்தோ அந்தோ!
உதவாத தடிப்பயலே போடா அப்பால்
உன்னாலே தொல்லை" யெனச் சினந்து பேசி
சுதிப்பெட்டி தனைத்தூக்கி எறிந்து விட்டார்
சுக்குநூ றாயிற்றும் துடித்தேன் ஐயா.

கொலையென்னைச் செய்திடினும் பொறுப்பேன் நல்ல
குருவற்ற என்குரலை இதம தாக்கும்
விலையினிலே குறைந்தாலும் தெய்வம் போன்று
விளங்குகிற அக்கருவி உடைந்த தந்தோ
நிலையில்லாச் சுருதியினால் இசையுண் டாமோ?
நீள்துயரே நெஞ்சில்நிலை யாகக் கொண்ட
கலையுமினிக் கொலையாகும்; என்று கண்டேன்
கண்ணீராம் கடல்மீது மிதக்க லானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயில் பறந்தது

ஓரிரவு பேயமைதி உறையும் வேளை
உலகமெலாம் உறக்கத்தின் பிடியில் தாக்கும்
பேரிடரிற் பாய்கிடந்து புழுங்கி என்றன்
பெருக்குத் தந்தையென இருப்பா ரோடு
நேரில்லாச் சித்தியினை விட்டே நெஞ்ச
நினைவுற்ற முடிவுடனே வீதி வந்தேன்;
கோரைப்பல் போற்றேய்ந்த பிறையும் வானில்
கொடுக்கின்ற ஒளியினிலே வழியும் கண்டேன்.

குச்சொழுங்கை சிலதாண்டி குரைக்கும் நாய்கள்
குதிக்கின்ற செயல்கண்டும் நெஞ்ச கத்தில்
அச்சமிலா உறுதியுடன் நடந்தே அவ்வூர்
அமைந்துள்ள ஆலடியாம் சந்தி வந்தேன்;
மிச்சமுள்ள பொழுதையா லடியிற் போக்கி
விடிவதற்கு முன்னெழுந்தே விரைந்தேன்; அங்கோர்
முச்சந்தி தனிற்திரும்பி வரும்போ தென்றன்
முன்மாட்டு வண்டியொன்று போகக் கண்டேன்.

'தூரமா வண்டியிது போகு' தென்றே
துயரமுந்த கேட்கவண்டிக் காரன் அன்பு
சேரயாழ்ப் பாணத்துக் கென்றான் என்னைச்
சேர்த்துக்கொள் என்றேன்பின் னாலே யேறும்
நேரமது போகு' தென்றான் ஏறிக் கொண்டேன்
நில்லாமல் மாடுகளும் ஓட வெய்யோன்
பூரணமாய் கிழக்கினிலே தோன்றும் வேளை
போய்விட்டோம் யாழ்ப்பாண துறைக்கே நாங்கள்.



சிறியவன்நான் ஆனாலும் மனத்தின் திட்டம்
சிதறாத நிலையுடையேன்; அன்னை அன்பின்
குறியாக விரலிடையே ஒளியீந் தந்தக்
குணத்தாளின் நினைவுதரும் மோதி ரத்தை
சிறிதாகும் பணத்துக்காய் விற்றேன்; என்றன்
சிந்தையிலே உருவான நோக்கம் எல்லாம்
அறியாத நாடான இந்தி யாவில
ஆரவமர்ந் திசைகற்றுத் தெளித லாகும்.

தென்னிந்தியக் கரையினிலே அமைந்த தான
சீருற்ற துறைதூத்துக் குடிக்கே செல்ல
இந்நாட்டுப் பாய்க்கப்பல் பொருட்க ளேற்றி
இன்றுபுறப் படுமென்றார்; ஆர்வத் தோடே
என்னகத்து விருப்பைமா லுமிகட் கோதி
ஏறிவிட்டேன்; கடல்மீது செல்லும் போது
பன்னரிய தாய்நாட்டுப் பற்றாற் கண்ணில்
பனித்தநீர் தனைத்துண்டாற் துடைத்துக் கொண்டேன்.

அன்னையிந்த உலகத்தில் இருப்பா ளானால்
ஆதரவே யற்றவனாய் அகதி போல
இந்நாட்டை விட்டேகல் ஆமோ? எந்தை
எனைமைந்தன் என்றகருத் துடையா ரல்ல;
என்னசெய்வேன்? விதிசெய்த சதியி னாலே
இதயமது குமுறிடவே, சகந்தாய் அன்பால்
சின்னவனைக் காத்திடுவான் என்றே நம்பி
தென்னகத்தை உன்னிநிலை தெளிய லானேன்.

கண்ணீரில் என்கண்கள் மிதக்கக் கண்டு
கலஞ்செலுத்தும் மாலுமிகள் கனிவ தாக
"மண்ணதனில் விதிவகுத்த வழியில் யார்தர்
ஒழுவதை யாற்றமுடி யாது தம்பி
எண்ணியவுன் நோக்கத்தை இறைவன் ஓர்நாள்
ஏற்றமுறச் செய்திடுவான்" என்றே தேற்றிப்
புண்ணடைந்த இதயத்தைப் புரக்கி அன்பின்
பொலிவதனை காட்டியெனைக் கூட்டிச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கெதுவென் றேயறியேன் கடலோ சீறிச்
சினப்பதுபோல் பொங்கிவரும், அன்னை யில்லா
மக்களென கலமதுவும் அலையும்; தக்க
மாலுமிகள் திடமுடையார்; அனுப வத்தால்
தக்கநிலை அறிந்தேகாற் றிசைந்து வீசும்
தன்மையுடன் கலமதனை செலுத்தி எந்த
விக்கினமும் இன்றியிரண் டாந்தி னத்தில்
விடிகின்ற வேளையிலே கரையிற் சேர்ந்தார்.

ஊரதுவோ புதியதுவாம் முன்பின் அந்த
ஊர்பற்றி எனக்கொன்றும், விளக்க மில்லை
யாருடைய துணையுமில்லை இதயந் தன்னில்
இலங்குகிற இலட்சியத்தைக் காண்ப தெப்போ?
போராடும் நெஞ்சமுடன் பொருமிக் கொண்டே
போகின்றேன்; வழியிலொரு மனிதர் பார்த்துன்
''ஊரென்ன? தம்பியிங்கே ஏன்நீ வந்தாய்?
உரையென்றே'' அன்புடனே கேட்க லானார்.

பேசுகின்ற பாணியில்நான் பிறந்த நாட்டின்
பெட்பிருக்கக் கண்டே 'யாழ்ப் பாணம்' என்றேன்
நேசமுடன் நானுமவ்வூர் என்றார்: மேலும்
''நீயெங்கு போகின்றாய்'' எனவும் கேட்டார்
பாசமுள்ள சங்கீதம் பயில்வ தற்கே
பரதகண்டம் உற்றகதை சொன்னேன் அன்னார்
ஆசைமிக வுற்றவராய் அழைத்துச் சென்றே
அன்புடனே தன்னில்லில் விருந்து வைத்தார்.

இருதினங்கள் கழிந்தவுடன் அவரு மென்பால்
இசைவுற்ற அன்புடனே மதுரை யுள்ள
ஒருவருக்குக் கடிதம்ஒன்றை எழுதித் தந்தே
உடன்வந்து புகைவண்டி ஏற்றி விட்டார்;
பெருகுகிற நன்றியதை மொழிந்து நானும்
பெட்புறவே புறப்பட்டேன்; பகலோன் மாள
இருளுகின்ற வேளையிலே அதனுள் நன்றாய்
எனக்குற்ற களைப்பாலே உறங்கி விட்டேன்.



நேரமது விநாடியென நிமிட மாகி
நிற்காது மணியாகி நெளிந்து செல்லச்
சோர்வகலத் தூக்கமதும் நீங்க நானும்
துடிதுடித்தே எழுந்துவிட்டேன்; மதுரை யென்ற
'ஊர்இதுதான்' எனவுரைத்தார், மெதுவாய் என்றன்
உடைபொதிந்த கைப்பெட்டி எங்கே யென்றே
பார்த்தேன்அப் பெட்டியில்லை, என்ன செய்வேன்?
பரிதாப நிலையுடனே வெளியே வந்தேன்.

மூவேந்தர் தனில்மூத்த பாண்டி யன்தன்
முடிகொண்ட மூதூராம், சங்கம் வைத்துப்
பாவேந்தர் பனுவல்களைப் படைத்த அன்பு
பண்பாடு கலையெல்லாம் பழுத்த மேலாம்
பூவெந்தும் புகழுற்ற ஊரை நெஞ்சம்
புளகமுறப் பார்ப்பதற்குற் சாக மில்லை
நாவேந்த நல்லவளாம் அம்பாள் கோவில்
நானிருக்கும் திசைமுன்னே தெரியு தங்கே.

ஒன்றான அவளையுளம் வைத்தேன், 'அன்னாய்!
உற்றவரைப் பெற்றவரை இல்லாப் பாலன்
நன்றான உன்னருளைத் தருக' வென்றே
நான்வணங்கி வீதியிலே நடந்தேன், கண்ணால்
ஒன்றல்ல பலகாட்சி கண்டேன், ஆனால்
உற்சாகம் ஒருப்படவே உறுதி யில்லை
என்றைக்கிங் கெவ்வாறு விடிவு தோன்றும்
எனும்எண்ணம் இதயமுற ஏங்கிச் சேர்ந்தேன்.

வீதியொன்றின் பக்கத்தில் விருட்சத் தின்கீழ்
வேய்குழலை ஊதுகின்றான் பிடாரன் இன்ப
நாதத்தை நாகபாம் பொன்று கேட்டு
நன்னெறிக்குக் கட்டுண்ட நல்லார் போல
காதலுடன் ஆடியதவ் விசையின் பத்தில்
கசியாத ஜீவனுண்டோ? அந்தோ சித்தி
நாதத்தின் சுவையறிந்தால் எனக்கும் இந்நாள்
நாதியற்ற நிலைவருமோ? யோசிக் கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றற்ற சித்தியினை நினைக்கத் துன்பம்
படர்ந்துவாம்; பாவியவள் கொடுமை யாலே
உற்றாரை வீடதனை ஒதுக்கி இந்த
ஊருற்றேன், உதவியிலா நிலைமைக் கானேன்;
சற்றேனும் அன்பில்லாள் இசையி னிலா
சாந்தியினைப் பெற்றிடுவாள்? சகத்தில் ஞானப்
பற்றென்றும் கருவிலுருக் கொள்ளு மென்றே
பகர்ந்துள்ளார் முதியவர்கள் அதுதான் உண்மை.

பெட்டியுடன் உடைகளெல்லாம் போயிற் றன்பால்
பேணியதூத் துக்குடிசேர் பெரியார் அன்பில்
கட்டுண்ட நண்பரது விலாசம் இல்லை.
காலத்தின் கோலமிது! கையின் காசோ
பட்டினியைத் தீர்ப்பதற்குச் சிலவாம் நாட்கள்
பயனாகித் தீர்ந்துவிட ஒன்று மற்றுக்
கட்டற்ற மந்தையென கண்கள் என்றன்
காட்டுவழி நடந்தூரைச் சுற்றி வந்தேன்.

தொடர்ந்தூரில் அலைகின்றேன்; நெஞ்சந் தன்னில்
துலங்குகிற லட்சியத்தை எவ்வா றிங்கே
அடைவதென அறியேன்நான் பசித்த வேளை
அன்புடையார் அமைத்துள்ள சத்தி ரத்தில்
கொடுக்கின்ற உணவுண்டே இரவில் ஆங்கே
கொடுகியொரு மூலையிலே படுத்துக் கங்குல்
விடிகின்ற வேளையிலே நடக்க லானேன்
விதிகாட்டும் சதிதானே மதியைத் தாக்கும்.

மாரிமழை ஓய்ந்துபனி மருவ மண்ணில்
மலர்ந்தமரார் கழியாகும் மாதந் தன்னில்
கூர்குளிரில் தெருவிலுள்ள சத்தி ரத்தில்
குறண்டியுமே படுத்திருந்தேன்; கோழி கூவப்
பார்தனிலே ஒளிகாட்டப் பரிதி வானில்
படர்கின்ற வேளையிலே, பக்தி யூட்டும்
சீர்கொண்ட திருப்பாடல் பாடி அந்தத்
தெருவினிலே ஒருகூட்டம் வருதல் கண்டேன்.



இசையுற்ற இன்பத்தில் திளைத்தேன். அந்த
இசையாளர் கூட்டத்தில் இணைந்து பாடும்
நசையுற்றேன்; மெல்லஅவ ரோடு கூடி
நாதனருட் பாடல்களைப் பொருளே பொங்க
இசையுடனே பாடிவந்தேன், ஆங்கென் கண்டம்
இணைந்தபொருள் இனிமையினை ரசித்தார் போலும்,
இசையென்றால் இதுவன்றோ! எனவென் காதில்
இன்பத்தைத் தந்திடவே உரைத்தார் அன்னார்.

பொய்யொன்றும் இங்கேநான் புகல வில்லை;
பொய்யதனில் அர்த்தமொன் றும் பொருந்தி டாது
நைகின்ற உள்ளத்தில் எழுந்து வந்து
நல்லிசையுள் பொருளதுவும் கலக்கும் போது
மெய்யுணர்வைத் தொட்டுவிடும் போலும்! அந்த
வித்தகர்கள் பலருமெனை வியந்து நின்று
'பையனின் ஞானத்தைப் பாரும்' என்றார்;
பாடல்களை நான்தொடர்ந்து பாட லுற்றேன்.

அந்தஇசை யாளர்களின் கூட்டத் துள்ளே
ஆற்றல்அறி வுடையர்திரு முத்தப் பாவாம்
வந்தென்றன் தோள்தொட்டு வருடி அன்பு
வார்த்தையினால் எனைமெச்சி 'தம்பி நீவிர்
எந்தஇடம் பெயரென்ன?' என்றார் நானும்
இரக்கத்தை சுரக்குமென் றன் கதையை சொன்னேன்
"நொந்துமனம் நலியாதே என்றோர் நாள்
நுண்கலையவுன் இசைவெற்றி தருமாம்." என்றார்.

நெஞ்சத்தில் நம்பிக்கை ஊட்டிச் சொல்லில்
நேசத்தை எனக்கூட்டி இனிதே காட்டி
வஞ்சமற்ற உள்ளத்தால் "வாழ்வு தாறேன்
வருக"வென எனைஅவரும் அழைத்தார், துன்ப
நஞ்சகன்ற அமுதத்தை கடவுள் அந்த
நல்லவரின் உருவிலென்பால் தரவந் தானோ?
மிஞ்சுகின்ற ஆர்வமுடன் இசையில் மிக்க
மேன்மையுள்ள அவருடனே செல்ல லானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீதக் கலையதனின் தாள ஞானம்
சப்தசுர, இசைப்புலமை, தகமை ஒன்றாய்
பொங்கியதோர் உருவாகிப் பூவிற் பூத்த
புண்ணியத்தில் கண்ணியத்தில் மிக்கோர், அன்பை
இங்கெனக்கே காட்டியதோ தெய்வம்? இன்பம்
இசைந்தமொழி வழிகாட்ட இசைந்தே அன்னார்
மங்களமார் வீட்டிற்கே வந்தேன் வாழ்வில்
மலர்ச்சியுறு நாளைவரும் என்றுணர்ந்தேன்.

வீட்டினிலே இசைநிறைந்து விளங்கு தாமோ?
வீணையொடு பலகருவி கண்டேன், அன்பின்
கூட்டணியிற் றன்கலைகள் தழைக்கு மென்ற
கொள்கைக்கு விளக்கமதாய், இனிய பண்பால்
நாட்டுக்கும் வீட்டுக்கும் நயமுண் டாக்கும்
நல்லபெண்ணுக் கிலட்சியமாய் முத்தப் பாவின்
பாட்டிசைந்த ராகமென அவரின் அன்புப்
பத்தினியார் பார்வதியும் அங்கே நின்றார்.

ஆண்டுகளில் நாற்பதினை களித்த அம்மாள்
அமைதியுடன், கணவனடி மலரை உச்சி
பூண்டுயர்ந்த பூரிப்பில் மிதந்தாள்; பொல்லாப்
போலியில்லாப் பண்பாட்டால் நாதன் சொல்லைத்
தாண்டஅறி யாதபெரும் தன்மை யொன்ற
தன்பதியோ டங்குற்ற என்னை அன்பால்
ஆண்டிடவே புதியஒரு அன்னை யானாள்
ஆண்டவனின் அருளைஅவள் அன்பில் கண்டேன்.

புதிதான உறவினிலே புதிய ஊரின்
புதுமைகளைப் புரிகின்ற தேவை யின்றி
முதியோராம் அவரன்பில் முழுமை கண்டேன்;
முன்னாளில் அன்னையவள் அன்பும், பண்டை
விதியதுவும் இருடனே இணைத்த தாமோ?
விளங்கவில்லை இசைக்கலையை விளக்க மான
சுதியோடு லயத்தோடு சுரத்திற் றோய்ந்து
துலங்குகிற அழகோடு கற்க லானேன்.

# குயில் இசை பரந்தது

விடிவதற்கு முன்னம்மை எழுவாள், வீடு
விளங்குகிற புதியஎழில் இசைய என்னை
'படியப்பா' எனஅன்பாய் எழுப்பி தானும்
பக்குவமே செய்திடுவாள், என்றன் மேனி
துடிக்கின்ற போதுமவள் துடிப்பாள், அந்தோ
சொல்லிடவே ஆகாதாம் அந்தத் தாயின்
வடிவத்தில் என்அன்னை வாழ்கின் றாளோ?
வையகத்தில் இதுபுதுமை எனவே கண்டேன்.

நெஞ்சமெனும் நீறினுள்ளே மறைந்தி ருக்கும்
நெருப்பான கலையுமங்கு கனன்று மூள
வஞ்சமெனும் நஞ்சற்ற முத்தப் பாவின்
வாத்சல்ய உணர்வுடனே கற்றேன்; தானும்
விஞ்சியதாம் என்புலமை, விளக்கம் காட்டி
மேலுமதை விரிவாக்கி வளர்த்தார் அன்பால்
தஞ்சமது தந்தபார் வதியாம் அன்னை
தயவுடனே என்வாழ்வு தழைக்க லாச்சே.

செத்துவிட்ட அன்னையவள் செய்த புண்யம்
சேர்ந்ததுவோ! சூழ்ந்ததுவோ பரதே சத்தில்
இத்தகைய நன்மையென்னை இசைய இன்பம்
இலங்கிடவே தினமவரைப் பணிந்தேன்; நேர்மை
சத்தியமே தஞ்சமெனக் கொண்டேன் தக்க
சங்கீதக் கலையதனின் நுட்பம் யாவும்
புத்திக்கே எட்டவித்தை இட்டார், ஞானப்
புண்ணியமும் கண்ணியமும் பொருந்த வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையிலே இசைத்தேனைச் சேர்த்துப் பண்பு
செறிந்துள்ள பெரியவர்தம் இல்லில் என்றன்
முந்தியநல் வினைப்பயனும் சூழ்ந்த தாலே
மோதுதுயர் ஏதுமற்றே வளர்ந்தேன், அன்பைத்
தந்தார்கள்; கலைஞானம் தகுதி காண
தக்கபல உதவிகளை ஊக்கிச் செய்தே
இந்தவிதந் தானவாழ வேண்டு மென்ற
இலக்கணத்துக் கிலக்கியமும் உணர்த்தி னார்கள்.

காலமென்ற செடியோஎக் கணமும் தப்பாக்
கதியோடு வளர்வதுவாம்; இயற்கை எண்ணக்
கோலமதும் திரிபற்றுக், குணத்தை யொன்றக்
குருவுடனே அவர்தரும பத்னி சொல்லும்
சீலமுறு வழிச்சென்றேன்; தினங்கள் சீராய்ச்
சென்றுபல மாதமென மாறி, ஆண்டில்
நாலுகடந் திடவேநான் நல்லோர் போற்றும்
நலமுற்ற காளையென மலர்ச்சி பெற்றேன்.

தாயவளின் எழிற்சாயல் என்னி லுண்டு
தந்தையரின் உரத்தவுடல் நிலையும் கொண்டேன்;
தூயவரின் தொடர்பாலே உற்ற பண்பும்
துலங்குதென மற்றவர்கள் உரைப்பர்; இங்கே
போயகன்ற துயரத்தை மதித்தி டாமல்
புதுமையுடன் பொலிவுற்றேன்; ஆனல் என்றும்
மாயிருமா ஞாலத்தில் மறைந்து தாக்கும்
வன்விதியின் நிலையதனை அறிகு வேனோ?.

முறையாகப் பயிற்சியது பெற்ற தாலும்
முறையான குருவினுயர் சிட்சை யாலும்
நிறைவுற்ற ஞானமென அறிவோர் கூறும்
நிலைகொண்டேன்; அக்காலம் குருவும் என்னைக்
கரைகண்ட அறிவுற்ற கலைஞர் கூடும்
கலைமன்றம் ஒன்றினுக்கே அழைத்துச் சென்றார்;
'திறமான புலமையிதாம்' என்றே அன்னார்
செப்பிடவே இசையிந்தேன்; வாழ்த்தி னார்கள்.



ஒளியறியா இருளூடே கிடந்து நானும்
உழைப்பதனுல் உருப்பெற்றேன் குருவின் அன்பால்
வெளியுலகில் வெளிப்பட்டேன் அதனுல் நல்ல
'வித்துவான் இவன்' என்ற பெயரும் கொண்டேன்;
பழகியறி யாதபலர் என்னை ஆண்டிப்
பண்பாகப் பேசிமரி யாதை தந்தார்
அளவிடற்கே அரியபெரும் செல்வம் ஆய
அன்னைகலை வாணியருள் என்றே கொண்டேன்.

நாடறிந்த நற்கலைஞர் கூடும் ஞான
நலம்நிறைந்த சபையினிலே நடுவே நானும்
பாடுகின்ற பெருமையதைப் பெற்றேன், நாடு
பரவியது என்புகழும் 'இளமை கொண்ட
பாடகனும் இவன்பாட்டிற் கீடுண் டாமோ?
பண்பட்ட வித்துவத்தை உடையா' னென்றே
நாடியுமே பலர்வந்தார்; நன்றி மீர்ந்தேன்
நல்லபொருள் வருவாயும் கூடிற் றுமே.

வருவாயும் புகழ்துவும் வந்த போதும்
வளர்த்தென்னை உருவாக்கி விட்ட சீலப்
பெரியவரை எனைப்பெற்ற மைந்த னாக
பிரியமுடன் வளர்த்தஅவர் மனைவி யாரை
உரியஇடத் தினில்வைத்தேன்; உள்ளத் தாலே
உண்மைபெற வழிபாடும் செய்தேன், ஆனல்
அரியவிதி அமைத்துள்ள காரி யத்தை
அறிகின்ற பெரியநிலை தெரியா தில்லை.

நண்பர்களாய்ப் பலர்என்னை நாடி வந்தார்
நாடுமவர் தொடர்பாலே மதிப்புக் கொண்டே
வண்ணமுறப் பயிற்சியதும் செய்தேன்; ஞானம்
வாகுபெறச் சுயத்துவமும் மருவிக் கொள்ள
எண்ணத்தில் செருக்கினையே நுழைய விட்டேன்
இதுவுலக நியதியதாம்; என்றே நானும்
திண்ணமுறத் தெரியாத தன்மை யாலே
சீரமைந்த வேரதிலே வெடிப்புண் டாச்சாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானென்ற அகங்காரம் தோன்று மானும்
நல்லதனைத் தீயதனை அறியும் ஆற்றல்
ஊனமுறும்; என்றுமுன்னை அனுப வத்தால்
உரைத்தவர்தம் மொழியென்றும் பொய்ப்ப தில்லை
நானிலத்தில் இத்தவுண்மைக் கெடுத்துக் காட்டாய்
நம்மிடையே பலருள்ளார்; அவருள் இங்கே
நானுமொரு சாட்சியென ஆவ தற்கே
நலிவுற்ற என்னெஞ்சில் மெலிவுண் டாச்சாம்.

புகழென்ற போதையிலே மயங்கிப் புன்மை
பொருந்தியவர் கருத்துடனே பொருந்தித் துன்ப
அழியிலே ஆழவுமே காலை வைத்தேன்;
அகங்காரம் அவற்றையிங்கே சரியா மென்ன
சகவாசம் பெருகிற்று, விதியும் மெல்ல
சதியென்ற வலைதனையே விரிக்கப், பொல்லா
இகழுக்கே வழிகண்டேன்; தகவில் லாத
எண்ணத்தைக் கொண்டுகண் ணியத்தை விட்டேன்.

நானிருக்கும் ஊரினிலே நாட கங்கள்
நடத்திடவே வந்ததொரு கோஷ்டி 'ஞானக்
கானசபை' அதன்பெயராம், மக்கள் உள்ளக்
கருத்திற்கு விருந்தான கதைகள் கட்டி
கானமுடன் நடிப்பறிந்த பலரைக் கொண்டு
கண்ணியமாய் இயங்கியது. அதனால் கோஷ்டி
ஆனநல ஊக்கமுடன் ஆக்க முற்றே
அமைப்பமைய விளங்கியதாம் அக்கா லத்தில்.

அக்கோஷ்டி தனிமுக்ய நடிகன் பேரோ
அருள்வரதன் அவன்பாடல் நடிப் பினாலே
முக்கியதோர் இடம்பெற்றான் இரசிகர் தம்மை
மூச்சுடனே பேச்சிழக்க வைத்தான்; ஊரின்
தக்கவரும் அவன்கலையை மதித்தார் அன்னான்
தகைமையதைக் கண்டதனால் கூத்துப் பார்க்கப்
பக்கமுள ஊர்களுள்ள ரசிகர் கூட்டம்
பறந்துவரும்; சிறந்தபெரும் திறமை கொண்டோன்.



நாடகத்தில் ராஜபார்ட் வேடம் தாங்கும்
நடிகமணி அருள்வரதன் சுகவீ னத்தால்
நாடகத்தில் பங்குகொள்ள முடியா வாறு
நலிவுற்றுப் படுக்கையிலே படுத்து விட்டான்;
நாடெங்கும் நந்தனார் நாட கத்தை
நடத்துவதற் கானவிளம் பரத்தால் கூட்ட
கூடியது முதலாளி கண்டார் உள்ளம்
குலைவுற்றே செயலிழந்து விழிக்க லானார்.

ஊரிலுள்ள பெரியவர்கள் என்னைப் பற்றி
உரைத்தவுரை அவருளத்தில் தென்புண் டாக்க
நேராக எனைத்தேடி வந்தார்; நெஞ்சம்
நெக்குருகப் பேசியவர் நாட கத்தின்
சீரதனைக் காட்டியென்றன் சிந்தை தன்னை
சிறிதுசிறி தாகப்பின் திருப்பி நாட்டில்
பேரதனைப் பெரிதாக்கி வைப்ப தற்கே
பெரும்பயனும் இதுவென்று உரைக்க லானார்.

கூத்தாடிப் பயிற்சியிலேன் என்ன செய்வேன்
குணமாக அவர்க்கெடுத்து நிலையைச் சொன்னேன்
நேர்த்தியுள என்னுருவும் இசைஞா னத்தில்
நிலைத்துள்ள சாதகமும் நாட கத்தில்
கீர்த்தியெனக் குண்டாக்கும் என்றார் மேலும்
கிளர்ச்சியினைக் கொள்ளுமுரை யாலென் நெஞ்சை
பேர்த்துவிட்டார், எனைவளர்த்த பெரியோர்க் கொன்றும்
பேசாமல் ஆமென்றே வாக்கை ஈந்தேன்.

குருவாகித் தந்தையுமாய் அன்பை என்பால்
கொடுத்திந்த உலகத்தில் மனித னாக
உருவாக்கி வைத்தவர்க்கே உரைத்தி டாமல்
ஒருப்பட்டேன் என்றவுணர் வுந்த அன்னார்
அருகுற்றே நடந்தவற்றைக் கூறி நின்றேன்;
'அவசரத்தில் ஆமென்றே வாக்குத் தந்தே
ஒருப்பட்டு பின்மாற்றல் ஆகா' தென்றார்;
உணர்வதனை வழிப்படுத்தி மேலும் அன்னார்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூத்தாடும் கலையொன்றும் குறைந்த தல்ல
குன்றாத இசைஞானப் புலமை நாளும்
கூத்தாடும் பயிற்சியினாற் கிடைக்கும், ஆனால்
குணம்பிறழும் செய்மையிலா நெறியாற் குற்றம்
காத்திருந்து தாக்குமுனைச் சந்தர்ப் பங்கள்
கருத்துக்கே இடையூறாய்ச் செலுத்தும் என்றும்
ஆத்திரத்தால் அறிவிழத்த லாகும், உன்றன்
அகத்தினிலே அமைதியுமே இல்லா தாகும்."

இன்னபல கருத்துகளை இசைந்தன் னாரும்
என்பால்அன் பாலுரைத்தார், இளமைக் காலம்
பின்னுகிற கவர்ச்சியதால் பின்னே தோன்றும்
பிழையதனை அறிபவர்கள் எவரும் இல்லை!
என்னையங்கே மயக்கியவர் பலராம் அன்பால்
இடித்துரைத்த குருமொழியை விட்டே, உள்ளம்
துன்னுகிற ஆசைகளால் நாட கத்தில்
தோன்றிவிட்டேன் என்காலை ஊன்றி விட்டேன்.

இசைப்புலமை யுடனுடலில் எழிலும் கொண்டேன்;
ஏற்றவகை இடையிடையே கதைக்கே மேவி
இசைந்தஉரை தனைப்பின்னால் இருந்து சொன்னார்;
இக்காலம் போலல்ல அக்கா லத்தில்
இசையாலே நசையூட்டி பாடு வோர்க்கே
ஏற்றமுண்டாம் ஆகையினால் வெற்றி கண்டேன்;
அசையாத பற்றையென்மேல் நாட கத்தின்
அமைப்பாளர் கொண்டுவிட்டார், என்ன செய்வேன்?

மறுநாளும் முதலாளி மனைக்கு வந்தார்
மட்டற்ற வார்த்தைகளைக் கொட்டி, "நீயோ
பிறவியிலே வந்தவொரு கலைஞன், நாடு
பெறமுடியாச் செல்வம்நீ, நாட கங்கள்
மறுமலர்ச்சி ஆவதற்கே வழியைக் காட்ட
ஸ்வயமிசை மலர்ந்தவன்நீ உண்மை; உன்நற்
றிறமையது பயன்பட வேண்டும் இன்றே
சேர்ந்தெம்மை ரட்சிப்பீர்" என்றார் மேலும்;......



"நவமான இக்கலையால் நாளை நின்பேர்
நாட்டினிலே விரைவாகப் பரவும் காலம்
அவமாக நீயிருக்க லாகா தப்பா
அருமையுள்ள உன்கலையின் பெருமை மேலாம்
தவமான முற்பிறவித் தொடர்பாம் இன்றே
தக்கவழி செலுத்திடவே வேண்டு" மென்றே
அவருரைத்தார்; அதனோடு நெஞ்சில் முன்பே
அரும்பியவென் ஆசையதும் இணைந்த தாமே.

கலைஞன்தன் இதயத்தில் கனிவை யூட்டி
காதலையே கொடுப்பதெல்லாம் ரசிகன் நல்ல
நிலையறிந்து பாராட்டும் சொல்லே யாகும்!
நிதர்சனமாம் இதைமறுப்போ ருண்டோ? என்னை
பலவாறாய்ப் பாராட்டி ரசிகர் முன்னாள்
பகர்ந்தனவும் மனமதிலே கிளைக்க நெஞ்சில்
பலமுற்ற உறுதிநிலை இற்றுப் போக
பருவத்தின் புதுமைக்கே முதன்மை தந்தேன்.

நல்லவராம் எனையிசையில் இயக்கி வந்த
நற்குருவோ இதையறிந்தார், நொந்தார், ஓர்நாள்
மெல்லஎன்றன் மனைவந்து, "தம்பி உன்றன்
மேலான இசைப்புலமை பெருகும் நாட்டில்
வல்லபுகழ் ஈந்திடும்நீ பொறுமை யோடவ்
வழிக்கேகல் நல்லதன்றி புதிய பாதை
தொல்கலைகளைத் தந்திடுதல் கூடும் நீயுன்
சொந்தவழி என்றுநன்மை தெரிக" வென்றார்.

விதிவகுத்த நெறியதனை விளங்கு வோர்யார்?
விந்தையினைக் காட்டுகின்ற உணர்ச்சி செய்யும்
சதியென்றும் மதியதனைச் சாடு மன்றோ?
சால்புடைய குருமொழியைக் கடந்தேன்; கண்ட
புதுக்கவர்ச்சி பொருந்திடவே நாட கத்தில்
புகுந்துபரு வத்துள்ள வேகத் தாலே
எதிலுமிங்கே மாற்றத்தை எய்து தற்கே
இசைந்துளத்தின் நசையதனை இலக்காய் வைத்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையெனும் ஒன்றைவிடப் போலி என்றும்
    உணர்வதனை விரைவினிலே கொள்ளும் நெஞ்சத்
திண்மையினைச் சிதறடிக்கும் தெளிவே இன்றி
    சிரத்தையைப் போராடித் தாழ்த்து மென்றே
வண்மைமனம் கொண்டவர்கள் முன்னை நாளில்
    வகுத்தநெறி பொய்ப்பதில்லை; மனித வாழ்வில்
உண்மையிதை ஆதியிலே அறியும் ஆற்றல்
    உள்ளவனே உலகத்தில் உறுதி யுள்ளான்.

ஓரிடத்தில் உறைகின்ற நிலையே இன்றி
    ஊரூராய் நாடகங்கள் நடத்தச் சென்றோம்
சாரங்கன் 'ராஜபார்ட்' என்றால் அந்நாள்
    சங்கீதப் பிரியர்கட்கே வேட்டை யாகும்;
சீரான கதைவசன அமைப்புக் கப்பால்
    சிந்தையினைக் கவர்கின்ற இசையின் மேலாம்
வேரதனால் வெற்றிபல உற்றேன் என்னை
    விரும்புகின்றோர் எண்ணிக்கை பெருக லாச்சாம்.

பேர்கொண்ட என்மேலே பிரியம் கொண்டே
    பெருமைமிகு அறிஞரெல்லாம் வந்தார், சென்ற
ஊர்கொண்ட ரசிகரெல்லாம் போற்றி ஏற்றி
    உபசாரம் செய்தார்கள்; என்ஞா னத்தால்
கூர்கொண்ட அம்புவிழி மாதர் எல்லாம்
    குளிர்மொழியால் வாழ்த்தினராம்; இளைஞன் நெஞ்சின்
நேர்கொண்டு நெறிநிற்க முடியு மாமோ?
    நிலையிதுவோ உலகத்தின் பொதுமை யன்றோ!

வள்ளிதிரு மணம்என்ற கதைந டத்த
    வளமிகுந்த வடலூரை அடைந்தோம், அங்கே
வெள்ளமெனத் திரண்டனராம் ரசிகர் எல்லாம்
    மேடையிலே திரைவிலகி வேல னாகி
தெள்ளியநற் தமிழிசையில் பாடும் போது
    திருவுடனே பொருந்துபொருட் சுவையைக் கேட்டே
உள்ளமொன்றக் கூட்டமெலாம் 'முருகா' என்றே
    உரைத்தமொழி உளத்திலின்றும் ஒலிக்கு தையா.



அழகமைந்த உருவுடையேன் நடிப்பும் நல்ல
    அனுபவமும் முதிர்ச்சியுறச் சபையோர் கொள்ள
பழகுதமிழ்ப் பாடல்களைப் பண்ணோ டு
    பாத்திரத்தின் சீர்த்தியுறப் படிப்பேன் நெஞ்சம்
இளகிடவே கேட்டோர்த்தே உவப்போ டன்றே
    எல்லோரும் கேட்டார்கள். அக்கா லத்தின்
வழமையிது ரசிகர்களை மகிழ வைக்க
    மனமொன்றி நாம்பாட வேண்டு மாமே.

கலைபுரண்ட களிதுளும்பக் கவலை யின்றி
    காலமது கரைகிறது நாடகத்தின்
வரன்முறையை வடிவாக அறிந்தேன் என்னை
    மருவியுள சகநடிகர் கூட்ட மெல்லாம்
குருவாக எனைமதித்து வரும்போ தன்பாய்
    குறையின்றி நானறிந்த நுட்பங் காட்டி
உருவாகி அவருயர உதவ, என்னை
    ஊக்குவித்தார் நம்கோஷ்டி உரிமை யாளர்.

இந்தவிதம் புகழுற்று நாட கத்தோ
    டிரண்டறவே கலந்துவிட்டேன், எனக்கு வேறு
சிந்தனையே இல்லாத நிலைக்குள் ளானேன்
    திட்பமுடன் நுட்பமுற நடிக்கு மாற்றல்
இந்தவிதம் தானென்ற இலக்க ணத்தின்
    இலக்கியமாய் ஆகியவென் பலத்தி னாலே
பந்தமுறறோர் கோஷ்டியுள்ள நடிக ரன்னோர்
    பட்சத்தின் பாற்பட்டேன், பெருமை பெற்றேன்.

என்னத்தை நேரதிலே போற்றி னாலும்
    எங்களவர் உள்ளத்தில் பொறாமை என்றும்
பின்னியுமே இருந்திடுமாம்; முன்னுக் கொன்றை
    பேசியவர் நேசமுடன் நெருங்கிப் போற்றி
பின்னாலே குறைகூறி வெறுப்பும் காட்டல்
    பிறவியிலே உருவான செயலோ? இந்த
முன்னுக்கு நேசித்துப் பின்னே தாக்கும்
    முறையாலே சமூகமதே குறைக்குள் ளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தாடும் வேளையிலே குமுமி நெஞ்சம்
கொண்டவுணர் வமைந்திடவே மெச்சி முன்னால்
ஆர்த்தொலியே செய்கின்ற சிலபேர் அன்னாள்
அடியேனைப் போற்கூத்தே ஆடு வோரைக்
'கூத்தாடி இவர்களுக்கா மதிப்'பென் றுள்ளம்
கொண்டவெறுப் புணர்வினையும் வெளியே காட்டி
நாத்தழும்பே உறப்பேசு வார்கள் ஐயா!
நானறிந்த உண்மையிது நன்கு கேளீர்!

வண்டியொன்றில் ஏறியொரு ஊர்வி டுத்தே
மாலையிலே கூத்தாடச் சென்றோம், அந்த
வண்டியினை ஓட்டிவந்தோன் நாங்கள் செல்லும்
வழியினிலே மாடுகளை அவிழ்த்துக் கட்டி
"கொண்டகளைப் பாறியதும் போவோம்" என்றே
கூறிவிட்டுப் படுத்துவிட்டான்; இரவில் கூத்து
வண்டியின்றி நாம்போக முடியா தந்த
மனிதனையே நாம்எழுப்பி அன்பி னோடு .....

"இன்றிரவு நாடகமாம் வானைப் பார்நீ
இரவியும்மேல் வானகத்தில் இறங்கி விட்டான்
நன்றாக இருட்டுவதன் முன்னே சென்று
நாம்எம்மைத் தயார்படுத்த வேண்டும் அப்பா
உன்றயவு இல்லையெனில் எங்கள் மானம்
ஒரேபாடாய் ஆகிவிடும்" என்றே நாங்கள்
அன்றவனை அன்புடனே கேட்ட போதங்
கவனுரைத்த கடுமொழியைக் கூற லாமா?.

"கூத்தாடிப் பசங்களடா நீங்கள் மானம்
கொண்டவரா? சீரில்லா வழியில் இன்று
காத்தாலே புறப்பட்ட மாடி ரண்டும்
களைத்துவிட்ட நிலைகண்டீர்" என்றே பாய்ந்தான்
ஆத்திரத்தை நாமடக்கி அன்பாய்ப் பேசி
அவனுடனே ஊரடைந்த கதையைக் கூறின்
நேத்திரத்தில் நெஞ்சமதின் இரத்தம் காண்பீர்
நிச்சயமாய் அன்னாளில் நிலையில் வாறாம்.



ஒருவாறு வண்டியிலே ஏறி நாங்கள்
ஊரினையே அடைகின்ற வேளை முற்றாய்
இருளமுக்காய்ப் படர்ந்ததுவாம், ஒழுங்கு செய்தே
எம்நாட கத்தையன்று நடத்து தற்கு
ஒருதடையா பலதடையாம் அந்தோ எங்கள்
உள்ளத்தில் கொண்டதுயர் ஆற்றி அங்கு
விரைவாக மேடையினை அமைத்து விட்டோம்
வில்லங்கம் வேறுவழி தோன்றிற் றாமே.

அல்லிஅர்ச் சுனன்கதையாம் ஆடு தற்கே
அமைந்துள்ள நாடகமாம், நடிகர் தம்முள்
அல்லிக்கும் தாடிஅர்ச் சுனர்க்கும் தாடி
அரிவைபவ ளக்கொடிக்கும் தாடி, அந்தோ
தொல்லைக்குள் தொல்லையிதா? சவரஞ் செய்யும்
தொழிலாளி "கூத்தாடிப் பயல்க ளுக்கே
அல்லதனில் தொழில்செய்ய மாட்டே" னென்றே
அடம்பிடிக்க நாமெல்லாம் திகைக்க லானோம்.

அவ்வூரின் கர்ணத்தைக் கண்டு சொன்னோம்
அவரங்கு குறுக்கிட்ட தாலே அந்த
ஒவ்வாத தொழிலாளி உடன்பா டுற்றே
ஒழுங்காகச் சவரமதை முடித்தான், யாமும்
எவ்வாறோ நாடகத்தை முடித்தோம், ஐயா
இதுபோன்ற தடைகளுடன் துயர்கள் வாழ்வில்
எவ்விதமோ குறுக்கிடுமாம் அதனை யெல்லாம்
எடுத்தியம்பு வதனாலே பயனே யில்லை.

ஏற்றிடுவார் தூற்றிடுவார் இரட்டை வாழ்க்கை
இருந்தாலும் கலைமேவும் இன்பத் தாலே
தூற்றுவதைத் 'தூ'வென்போம், போற்றல் தம்மை
துணைகொண்டு தொழிலதனின் உயர்வு பூத்தே
ஏற்றமுறப் பலஊர்கள் சென்றே யென்றும்
எங்களுக்கே உரியபுகழ் எய்தும் காலை
மாற்றரிய விதியதனின் சதியாய் ஆங்கே
வந்ததுவாம் புதிதான கோஷ்டி ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலின் காதல்

எங்களது கோஷ்டியுள்ள நடிகர் எல்லாம்
இளமைமிக்க ஆண்நடிகர், பெண்க ளில்லை
அங்குற்ற புதுக்கோஷ்டி தனிலே உள்ளோர்
அழகுற்ற அரிவையர்கள், அதனாற் கூட்டம்
எங்களது நாடகத்தில் குறைவே யாதல்
இயற்கையதாம் என்செய்வோம் எமது கோஷ்டி
சங்கடத்துள் ளாகியது நஷ்டம் வேறு
தரித்திரமும் சிறிதாகத் தாவிற் றாமே.

கீதமணி கீதாவாம் புதுக்கோஷ் டிக்குக்
கீர்த்தியினைக் கொடுக்கின்ற நடிகை நல்ல
சாதகத்தால் வெற்றிபெற்றாள் உயிரே யான
சப்தசுரம் சுருதியுடன் இழையும் கண்டம்
நாதத்தின் பிறப்பாமோ? என்னும் வண்ணம்
நயம்பேசும் அதனாலே கர்வம் உற்றாள்
சாதுவெனக் கிடந்தவனைத் தூண்டி ஆங்கு
சமர்பொருதக் கருதினளோ? விதியே சொல்லும்.

"நாடகத்தில் யுவராஜப் பட்டம் பெற்ற
நடிகர்திரு சாரங்கர் அறிக! இங்கே
ஈடற்ற இசைஞானப் புலமை கொண்டே
இறுமாந்தீர் திறமிருந்தால் இந்த ஊரில்
மேடையொன்றில் இருவருமே நடித்தே எங்கள்
வித்தையினைக் காட்டிடுவோம் வருக! என்றே
ஆடலிலும் அழகினும் புகழே கொண்டாள்
ஆண்மைக்குப் பகிரங்கச் சவாலே விட்டாள்.



பெண்ணவளும் தருக்குற்றாள் என்னை அன்னாள்
பேடியென மதித்துள்ள நிலையைக் கண்டும்
எண்ணத்தில் இறுமாப்பே இன்றி நானும்
எப்பதிலும் கொடுக்காமல் இருந்தேன்; மற்றோர்
'அண்ணாநீர் அமைதியுடன் இருப்ப தாலே
ஆண்மைக்கே இழுக்கவளின் அகம்பா வத்தை
திண்ணியவுன் திறமையினால் அடக்கி எம்பால்
சேர்ந்தஅவ மானத்தை அழிப்பீர்' என்றார்.

'கட்டழகுக் குமரியவள் அகம்பா வத்தைக்
காட்டுகிறாள் நமக்கென்ன விடுக' என்றேன்
'விட்டசவால் தனையேற்கா விட்டால் எங்கள்
வித்துவத்தைக்குறைத்தெடையேசெய்வர் அன்னாள்
கொட்டத்தை அடக்கிடவே வேண்டும்' என்றே
குமுறிநின்றார் சகநடிகர் அவர்கட் காக
விட்டசவால் தனையேற்றேன்; நாட கத்தை
விரிவாக நடத்திடவே பலர்முன் வந்தார்.

'ஒருமேடை தனில்இருவர்; அவர்தி றத்தை
ஒருமித்தே அறியவொரு வாய்ப்பு வாரீர்
தருணத்தை இழந்துவிட்டே அப்பால் நீவிர்
சஞ்சலமே கொள்ளாதீர், இசைவல் லாளன்
திருவாளர் சாரங்க னுடனே நாதச்
செல்வியராம் கீதமணி கீதா தோன்றும்
முருகவள்ளி கல்யாணம் வருக' என்றே
முறையாக விளம்பரமே செய்ய லானார்.

கூட்டமதா சொல்லிமுடி யாத கூட்டம்
கொட்டகையில் குந்திடவே இடமே யில்லை
காட்டகத்து மந்தியெனத் தொங்கிப் பாய்ந்து
கடினவதைப் பட்டுநெரி வுற்றே பார்க்க
நாட்டமுற்றே வந்தார்கள்; அந்த ஊரின்
நல்லபெரும் கலைஞர்களும் குழுமி யுள்ளார்
காட்டகத்தில் வள்ளிதினைப் புனத்தைக் காக்கும்
காட்சியிலே கீதமணி தோன்றி னாளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகியென்றால் இவள்தானோ? மறுவே யில்லை?
அழகுக்கே அழகூட்டும் விழிகள் ஞானம்
பழகுமிசைக் கண்டமுடன் பார்ப்போர் கண்கள்
பற்றிவிடும் உயர்வேடம் பெற்ற பாவை
குழகுமுறும் கொண்டையினைக் குமுத வாயைக்
குளிர்தருவின் நிழலான உருவை யெல்லாம்
எழில்முருகன் வேடமிட்ட படியே உள்ளத்
இசைவிணைய உள்ளிருந்தே பார்க்கின் றேன்நான்.

கலையறிவாள் கவினுடையாள் கால மெல்லாம்
கலைக்காகத் தனைவழங்கி அதனின் பேறாய்
நிலையான இடமுற்ற குமரி மாற்றார்
நெஞ்சத்தை நிலையின்றி மாற்ற வல்ல
வலைகொண்ட வனப்புடையாள் வாக்கில் வாணி
வதிந்தனளோ எனுமுண்மைக் கிலக்கு மானாள்.
அலையாத என்னகத்தை அலைக்க வந்தாள்
அரம்பையளோ? திலோத்தமையோ அறியேன் ஐயா.

கானவள்ளி வேடமிட்டு கானம் கொண்ட
கண்டத்தைத் திறந்துவிட்டாள்; மண்ட பத்தில்
தேனருந்தும் சிற்றளிகள் போலே ஆனார்
திரண்டிருந்தார் எல்லோரும்; சங்கீ தத்தின்
ஞானமுள்ள நற்கலைஞர் மோன முற்றார்;
நாடிநரம் பெலாமுணர்ச்சி யற்று மேலாம்
வானமுதைப் பெற்றனரோ? வார்த்தை யில்லை
வாகுடைய அவள்திறனை வழுத்து தற்கே.

'ஆலோலம் ஆலோலம் சோசோ' வென்றே
அவள்கிளியைத் துரத்துகிறாள் கிளியே யானாள்
பாலாகிப் பழரசமாய் தேனோ டொன்றி
பருக்குகிறாள் பைந்தமிழை பருகி னோர்கள்
தாலாட்டும் தாய்க்குரலுக் காட்பட் டங்கே
சயனமுறுங் குழந்தைகளாய் ஆனார் மூன்றாம்
காலத்தை யுணர்நாரா தருமே வந்தார்
கவனமெலாம் பின்கதையுள் தொடர்ந்த தாமே.



நாரதரும் வள்ளியுடன் பாவி னாலே
நற்கருத்துப் புலப்படவே வாத மிட்டுச்
'சீரமைந்த முருகனுக்கே உன்னை யானும்
திருமணமே செய்துவைப்பேன்' என்றன் னாள்முன்
நேரான சபதமிட்டு நீங்கி விட்டார்
நிசப்தத்தை நின்றழிக்கும் சப்தம் ஓய
ஆரவா ரத்துடனே திரையைத் தூக்க
அடியேனும் முருகனென அவைமுன் வந்தேன்.

'திருமுருகா! பெருமுருகா! போற்றி போற்றி
திக்கெட்டும் நிறைந்தவனே வந்தா யாமோ?
அருள்தருக!' எனஅவையிற் குழுமி யுள்ளோர்
அனைவருமே என்றனெழில் உருவைக் கண்டு
உருகியுளம் குரலாகத் துதிக்க லானார்
உண்மையிலே நிலைமறந்தேன் என்கண் டத்தில்
பெருகிவந்த இசையதனின் பெட்புந் தேரேன்
பேச்சில்லை மூச்சில்லை சபையின் கண்ணே.

எனைமறந்தேன் எங்குள்ளேன் என்ற எண்ணம்
இல்லாத நிலைக்குள்ளே அமிழ்ந்தேன் நெஞ்சில்
முனைப்பின்றி மூர்க்கமின்றி முருகன் என்ற
மூவாத தேவர்களைக் காத்தோ னாக
எனையாக்கி இசையோடு பாடு கின்றேன்.
என்வார்த்தை தனைநம்பும் ஐயா! ஆங்கே
கனைக்கின்ற கடலடங்கிக் கொண்ட தொப்ப
கர்வத்தை அடக்கிவிட்டாள் கீதா உண்மை.

சொல்லதனில் துலங்கியது தனிமை கண்டத்
தொனியினிலே விளங்கியதாம் இனிமை யெல்லாம்
அல்லலிலா தெய்வீக அருளா? இல்லை
அதிசயமா? அறியேன்நான், என்வாழ் வின்கண்
இல்லாத புதுமையிசை எழிலின் தோற்றம்
எல்லாமே ஒன்றாகி இணைய அந்த
மெல்லியளாம் சீதபணி தோற்று விட்டாள்
வேலவனாய் வெற்றியதைப் பற்றிக் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியன்னாள் உற்றதனால் நிமிர்ந்தேன் பெண்ணாள்
  வீழ்ந்துவிட்டாள ஆனாலும் என்னுள்ளத்தை
பற்றிவிட்டாள்; அவள்மீதே உற்ற பற்றால்
  பாகனையாள் எனைவென்றான்; அதனால் எம்முன்
தொற்றியது காதலதாம்; உலகின் கண்ணே
  தொந்தமுற வேண்டுமென்ற நியதி யாலே
விற்றுவிட்டேன் அவள்விழிக்கே என்னை; அன்னாள்
  விலைகொண்டாள் வேறிங்கு வார்த்தை யேனோ?

இதுதானா காதலையா? என்றன் கண்கள்
  இணையற்ற அழகியரைக் கண்ட துண்டு
மதுமாந்தும் வண்டானேன் கீதா என்ற
  மங்கையவள் உளக்கருத்தில் பொங்கும் காதல்
விதிதந்த சதியாமோ? வினையோ? இன்று
  விசனத்தில் வீழ்வதற்கென் மதியை நானும்
கதிகெட்டுப் போகவிட்டேன் காலம் காட்டும்
  கதையிதனை மாற்றிடவே முடியா தையா.

கன்னியவள் கற்கண்டுச் சொல்லால் என்றன்
  கருத்தினையே பின்னிவிட்டாள் காதற் காவில்
இந்நிலத்தின் எண்ணமின்றிப் பறந்தோம் நெஞ்சம்
  இன்பமெனக் கொண்டதனை உண்டோம வாழ்வில்
துன்னுகிற துயரமதை உணரா வாறு
  சுகந்தவளி வீசிற்று சுகமே என்றும்
என்னகத்தின் லட்சியமாய் ஆகிற் றையா
  இதுவியற்கை மாற்றிடவே முடியா தாமே.

என்றுமெனை இணைந்துநிழ லானாள் மேடை
  இருவரையும் கண்டுவிட்டால் எழிலை கொண்டும்
சென்றவிடம் அத்தனையும் எம்மைக் கண்டோர்
  சிரந்தாழ்த்தி வணக்கமதை செய்தார்; உள்ளம்
ஒன்றியதாம் கர்வமுமே இளைஞன் தானே
  உண்மையதை உணர்வதற்கே நேரம் இல்லை
துன்றுசுவைத் தோகையவள் துணைவி யென்றால்
  சொல்லவுமா வேண்டுமுளத் துடிப்பி னுக்கே.



வாழ்க்கையொரு நாடகமாம் நெஞ்சில் தோன்றும்
  மட்டற்ற இன்பத்தால் கட்டுப் பட்டோம்;
சூழ்ந்துவரும் சோதனைகள் என்ன வென்றே
  தோன்றாத இளமையிலே களித்தோம்; வாழ்வை
ஆழ்ந்தே நான் சிந்திக்கும் அறிவில் லாமல்
  அரிவையவள் பிரியமொன்றே உரிமை யென்று
வீழ்ந்து விட்டேன்; விதிவருந்த சதியோ வேறும்;
  வேதனையின் வேரானாள் அவள்பின் னாலே.

ஊரூராய் நாடகங்கள் நாளும் ஆடி
  உயர்வான நடிகரென ரசிகர் போற்றும்
பேரோடு விளங்கிவந்தோம் பணமும் சேரப்
  பெட்புறவே வாழ்க்கையிலே இனிமை ஆரச்
சோராத சுருதியுடன் லயமும் கூடும்
  சோபிதம்போல் கீதாவும் நானும் ஆனோம்;
தாராள வருமானம் கிடைத்த தெந்தச்
  சஞ்சலமும் அணுகாத நிலையும் கண்டோம்.

எந்தையரும் முந்தையரும் வாழ்ந்த ஊராம்
  யாழ்ப்பாணந் தனிற் சென்று கூத்துப் போட்டு
வந்தவர்கள் பலருண்டு அந்த நாளில
  வல்லஇசை ஞானமதை அளந்து பார்க்கும்
சொந்தமுள்ள புலமைக்கோர் யாழ்ப்பா ணத்தில்
  தோன்றிஇசைப் புகழ் கண்டார் என்றே என்றன்
சிந்தையிலே ஆசையினைத் தூண்டி னார்கள்
  சிறியேனின் உளத்தினிலே பற்றுண் டாச்சாம்.

★

# குயில் கூடடைந்தது

சந்தமுறு சங்கீதக் கச்சே ரிக்கும்
சாஸ்திரத்தில் சிறந்தவுயர் நடனத் துக்கும்
சிந்தைகவர் நாடகத்தை நடாத்து தற்கும்
சீரோடு பேருற்ற கலைஞர் தம்மை
இந்தியநாட் டினிலிருந்து கூட்டிச் சென்றே
இதயத்தால் பேணிடுவோர் யாழ்ப்பா ணத்தில்
அந்தநாள் பலரிருந்தார், அவர்க ளாலே
ஆக்கமுடன் ஊக்கத்தை கலைஞர் பெற்றார்.

இவ்வண்ணம் உள்ளவருள் கார்த்தி கேயர்
எனும்பெயரை உடையவரும் ஒருவர்
எவ்வண்ண மோவென்றன் பேரைக் கேட்டு
இருக்கின்ற இடமறிந்தே வந்தார் என்னைச்
செவ்வண்ணக் கிளியிசையாள் சீதா வோடு
சேர்ந்தூரில் சிலகூத்து நடாத்து தற்குப்
பவ்வியமாய் பேசிநெஞ்சில் ஊர்ப்பா சத்தை
பற்றவைத்தார் மற்றவற்றை மறந்து விட்டேன்.

பத்தியுடன் எனைப்பலரும் போற்றி னாலும்
பணமோடு புகழ்மேவிப் பாங்குற் றாலும்
எத்தனைதான் பேர்பூத்துப் பொலிந்திட் டாலும்
எனைப்பெற்ற தாயகத்துக் கீடுண் டாமோ?
எத்தனையோ துயர்தந்த சித்தி யோடே
என்றனது தந்தையையும் பார்ப்ப தற்குச்
சித்தமதில் ஆர்வமது முளையே கொண்டு
சீருறவே வேருறயாழ்ப் பாணம் வந்தேன்

"நாடகத்தில் இசையினில்நல் நடிப்பில் மன்னன்
நம்மூராம் யாழ்ப்பாணம் பிறந்த தீரன்
ஈடற்ற திறமையினால் இந்ய நாட்டில்
ஏற்றமிக வுற்றசா ரங்க னோடு
பாடலினால் கீதமணி பட்டம் பெற்ற
பைங்கிளியாம் கீதாவும் சேர்ந்தே ஒன்றாய்
மேடையிலே தோன்றிடுவார் சந்தர்ப் பத்தை
விடுதலிழப்" பென்றுவிளம் பரமே செய்தார்

ஒருநாளும் இல்லாத திருநா ளாக
ஊரெல்லாம் ஒன்றாகித் திரண்ட கூட்டம்
பெருகியது கொட்டகையில் இடமே யில்லை
பெருமிதத்தில் பூரித்தேன்; கண்டத் தாலே
உருக்கமுடன் மற்றவர்தம் கருத்தை ஈர்க்கும்
உணர்ச்சிமிகு இசையினையே உண்மை யாக
அருவியெனப் பொழிந்துவிட்டேன், ரசிகர் உள்ளம்
அடியேனும் அடைந்தின்பச் சுவையைக் கண்டேன்

மூலைக்கு மூலையெலாம் சென்றோம் எங்கும்
முறையான வரவேற்பு ஊரி லுள்ள
ஆலயங்கள் மன்றங்கள் விழாவி லெல்லாம்
அளவிறந்த நாடகங்கள் ஆடி நாளும்
பாலையளித் தேபேணும் அன்னையைப் போல்
பாசமுற்ற என்நாட்டில் பெற்ற வெற்றி
ஞாலத்தில் நானொருவன் என்னும் மேலாம்
நம்பிக்கை தனையெனக்கே ஊட்டிற் றாமே.

வீதியிலே நாதியற்று நின்ற என்னை
விதிகொண்டு வித்தையினைப் புகட்ட அன்பாய்
ஆதரித்த ஆசிரியர் தகைமை யாளர்
அன்பாளர் முத்தப்பா அவரின் பத்தினி
ஸ்ரீதேவி யன்னபார் வதியா ரென்றன்
சிந்தையிலே வந்தார்கள் அவரா லன்றோ
மேதினியில் நான்பெருமை கொண்டேன் அன்னார்
வித்திட்ட வாழ்க்கையினை மறக்க லாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தநா டதில்வந்து புகழே கொண்டேன்
சோகமுற என்றந்தை தேடி வந்தார்
நொந்தமனம் காட்டி 'மன்னிப் பாய்நீ' என்றார்
நோவதனை மேலாக்கி விடுதல் தப்பு
வந்தவரை நான்வணங்கி வரவேற் றன்பு
வார்த்தையினால் மகிழ்வித்தேன்; 'சாரங் கா நான்
தந்தைக்கு மகன்செய் யும் சேவை தன்னை
தகைமைபெற்ற உன்செயலிற் கண்டேன்' என்றார்.

பெற்றிட்ட நாடதனை உற்றேன் என்மேல்
பிரியாற்ற தந்தைஉற வினையும் பெற்றேன்;
கற்றவர்கள் கலைஞர்களின் பாராட் டுற்றேன்;
கண்ணியத்தில் நானுயர்ந்தேன்; திறமை யாலே
பற்றுவைத்தார் பலரதனால் வளமும் உற்றேன்;
பாழ்பட்ட விதியதனை உணர்ந்தே னானால்
குற்றத்துள் ளாவேனா? அந்தோ உம்முன்
கொடுமையுள்ள கதையினையும் கூறு வேனோ?

கலைஞர்களை வரவேற்றுக் கனிவு காட்டி
கலையதனைச் சுவைக்கின்ற இந்த நாட்டில்
புலைஞர்களும் உளராமோ? சத்தி யத்தில்
பொருந்தியவ ரிடையினிலே புல்லர் கூடிப்
பலவகையில் தொல்லைகளும் தருவ ரென்று
பகருகின்ற முதியவர்கள் வார்த்தை என்றும்
உலகமதில் பொய்ப்பதில்லை என்ற மேலாம்
உண்மையினை நீரறிய முடியு மாமே.

இந்தியநா டதிலிருந்தே எம்மை இங்கே
இன்முகமாய்க் கூட்டிவந்த கார்த்தி கேயர்
மைந்தனவன் பெயர்கமல நாதன் நல்ல
வடிவழகன், சுழியனவன் நடிப்பும் இன்பச்
சந்தமுடன் பாடுகின்ற சமர்த்து முள்ளோன்
சந்தர்ப்பம் கிடைக்கின்ற வேளை யெல்லாம்
வந்தெங்கள் கோஷ்டியிற்சேர்ந் பாட்டு பாடி.
வளர்ந்துபின்னர் நடிப்பதற்கும் இணைந்து
கொண்டான்.

# நயில் கொண்ட வேதனை

கலையார்வம் உற்றவனைக் காத லோடு
கனிவூட்டிக் கானமதிற் பயிற்சி யீந்து
நிலையான திறமைபெற வைத்தேன் அன்னான்
நெஞ்சத்தில் நஞ்சுதனை வைத்தே என்பால்
பலமான பக்தியினைக் காட்டி மிக்க
பவ்வியமாய் நடித்துவந்தான்; அவன்சிந் தைக்கண்
நிலவியுள்ள புன்மையதால் இனறென் வாழ்வு
நிலைகெட்டு வலைப்பட்ட மான்போ லாச்சாம்.

உற்றநல்ல நண்பனுமாய் என்னோ டொன்றி
ஊருராய் நாடகத்தில் நடித்துப் பேரும்
பெற்றுவிட்டான், துர்க்குணத்தை அறியேன்; ஐயா
பின்னாலே தானறிந்தேன் அறிந்து மென்ன
வற்றியதாம் என்வாழ்வின் வளமே; இன்று
வரண்டபெரும் பாலையெனும் நிலையு முற்றே
சுற்றுகிற வெறுங்கூடாய் ஆவ தற்கும்
தொடர்ந்தவொரு நாகமவன் உண்மை யாமே.

எங்களது கோஷ்டியிலே நடிப்ப தற்காய்
இணைதிந்ய நாட்டிலிருந் துடன்வந் துள்ள
மங்கையர்கள் சிலருடனே கமல நாதன்
மாசுடைய தொடர்புற்ற செய்தி கேட்டுப்
பொங்கியது கோபமுளம், ஒழுக்கம் ஒன்றால்
பொலிவுதரும் கலையென்ற உண்மை தன்னை
இங்கிதமாய் நானெடுத்தே உரைத்தேன் என்சொற்
கிசைந்தவனாய் அவன்நடித்தே இணைந்து வாழ்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாய் எனையிங்கே அழைத்து வந்த
அன்பர்திரு. கார்த்திகே யருக்கே யாக
பாதகமே செய்கின்ற மைந்தன் பற்றிப்
பதட்டமது காட்டாமல் கண்டித் தேன்நான்;
கீதாவும் மனத்தினிலே கேடு வைத்தாள்;
கிளர்ச்சிதரும் உணர்ச்சியினால் என்நெஞ் சத்தை
வேதனையே செய்துவந்தாள். என்ன செய்வேன்?
விதிகாட்டுஞ் சாதனையை மாற்ற லாமா?

பைங்கிளியின் மொழிகொண்ட கீதா முன்னாள்
பற்றற்றே என்னுளத்தை பற்றிக் கொண்டாள்
தங்களுயிர் வாழ்வதனை அழித்துச் சால்பு
தாழாத தமிழ்க்குலத்தில் உதித்த அந்த
மங்கையரின் போக்கினிலே மாற்றம் கண்டேன்
வஞ்சகத்தை நஞ்சதனை கொண்டோன் காட்டும்
பொங்குகின்ற உணர்ச்சிவெறிப் புதுமை கண்டாள்
போலியினைப் புனிதமெனக் கருதி விட்டாள்.

ஐயையோ இதனையுளம் சகிக்கு மாமோ?
அன்றைக்கென் குருமொழிந்த வார்த்தையெல்லாம்
மெய்யாகி வருவதனைக் கண்டே நெஞ்சம்
வேதனையாம் ஆழியிலே வீழ்ந்த தையா
பையவெனைக் கரைசேர்ப்பார் எவரு மில்லை
பாவியரின் பண்பதனைத் திருத்தி நன்மை
உய்யவழி காட்டுதற்கே அறியேன் துன்பம்
உறுத்திடவே பொறுமையினைப் பற்றிக் கொண்
டேன்.

இறைசெய்து கன்னியரைக் காக்க லாமோ?
சிந்தையிலே செய்யநெறி தழைக்கு மானால்
நிறைவுண்டு. நீர்மையுமே நிலைக்கும். அன்னார்
நெஞ்சத்தில் நஞ்சிருந்தால் காப்பி னாலே
நிறைவென்றும் நிலைக்காது. நீசப் பண்பின்
நிலைக்களனாய் உள்வர்க்கிங் கறத்தைப் பற்றி
பறையறைந்து பன்னுவதால் பயனே இல்லை
பாழ்பட்ட இந்தநிலை அழியா தாமோ?



புத்தூரில் நாம்நடித்த நாட கத்தின்
புதுக்கதையின் சாரமிதோ! சற்றுக் கேளீர்:
“சித்தத்தை ஒழுக்கத்தில் சேர்த்தே செய்ய
தெய்வநெறி கொண்டவொரு மன்னன அன்புப்
பத்தினியாய் வாழ்ந்தவொரு ராணி வஞ்சம்
பற்றியுள்ள உளத்துறவி ஒருவன் மீது
சித்தத்தை விட்டுவிட்டாள்; மன்னன் இந்த
சீரற்ற சிறுமைதனை அறிய வில்லை”

“துறவியைமன் னவன்வரவேற் றவனின் பாதத்
தூளியினை சிரம்வைத்து, மனைவி யர்க்குத்
துறவியினைச் சிலமுறைப் பேணச் சொல்லித்
தூயமலர்க் காவினிடை இருக்கை ஈந்தான்.
கறையுளத்தில் கொண்டுவந்த துறவி ராணி
காதலனும்; ராணியிதை அறிவாள் நெஞ்சை
மறைத்தவளும் வாக்கினிலே புனிதம் காட்டி
மன்னவனை ஏமாற்றி வந்தாள் நாளும்.”

அரசனென நான்வேடம் கொண்டேன்; கீதா
அரசியென ஆகினளாம்; கமல நாதன்
வரன்நெறியை வஞ்சகத்தால் பாழா யாக்கி
வஞ்சியரின் நெஞ்சுதோடும் துறவி யானான்.
திரையிழுத்தார் தீங்கரும்மை அன்ன பாடல்
சீரோன்ற என்கண்டத் திருந்து தேனாய்ப்
பெருகியது ரசிகரெலாம் என்னைப் போற்றி
பெருமையினைத் தந்தார்கள் மறக்க லாமா?

அந்தவொரு நாடகமே என்வாழ் வின்கண்
அமைந்தமுடி வானநா டகமாம் ஐயா
அந்தகனாய் கண்ணிருந்தும் ஆனேன் நெஞ்சை
ஆட்கொண்ட சினத்தினிலே அறிவை நீக்கி
இந்தஉல கத்தினிலே உயிரைக் கொண்டும்
இல்லாத வெறுங்கூடாய் சுற்று தற்கும்
சிந்தையினை நோகவைக்கும் கதைக்கும் காலாய்
சிறியவன்கா ரணனானேன் தெரிவீர்; மேலும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடமிட்டுத் துறவியெனக் கமல நாதன்
வேந்தன்முன் வந்திட்டான், அரசன் தானே
வேடத்தைக் கண்டுண்மை விளங்கி டாது
மெய்ம்மையிலே உற்றபற்றில் துறவிக் கான
வீடொன்றைக் காவினிலே அமைத்தே மன்னன்
மெல்லியலாம் பத்தினியைக் கடமை செய்ய
நாடோறும் அனுப்பிவைத்தான், நஞ்சு மிஞ்சி
நலிவுதரும் கதையதுவும் தொடர லாச்சாம்.

கூத்துவைக்க ஒழுங்குசெய்தோர் இந்தக் கூத்து
கூட்டத்தைப் பெருக்குதற்கு நல்ல தென்றார்
கூத்துக்குள் என்வாழ்வும் கூத்த தாகி
கொடியநிலை கூடுதற்கே வழியு மிட்டார்.
வேத்தவையில் மன்னரின்முன் அரசி யாரின்
விலங்குளத்தை புலப்படுத்தி வைத்தாள் சேடி;
ஆத்திரமே கொண்டிட்டான் அரசன்; வாளால்
அரிகின்றேன் அவளையெனப் புறப்பட் டானே.

பூங்காவில் இளந்தென்றல் வீசி மெல்லப்
பூத்துள்ள பூமணத்தை புளகத் தோடு
பாங்காக் கொண்டுசெலும் மாலை வேளை
பத்தர்முன் பத்தினியாய் சீதா மெல்ல
ஆங்குவந்தாள்; துறவியவள் கைப்பி டித்து
ஆராத காதலினால் முத்த மிட்டான்
நீங்காத இச்சையினால் நிலையை நீக்கி
நீசமுறும் செயல்களையே நேரிற் கண்டேன்

நடிப்பிதனை நன்றென்றார் அவையோர் ஆனால்
நடிப்பல்ல நெஞ்சுற்ற நசையி னாலே
துடிப்புடனே அவனிச்சை கொண்ட கொள்கை
துல்லியமாய் விளங்கியது, அரச னாக
நடிக்கின்றேன், எனமற்றார் நம்பும் வேளை
நானங்கு நாணாகி மேடை யென்ற
அடக்கத்தை அடக்கியாத் திரமே கொண்டேன்
அறிவில்லை நெறியறியேன் ஆழ்ந்தேன் துன்பில்.



கையினிலே இருந்திட்ட வாளிற் கூர்மை
கனன்றுவரும் சினமதுவோ அதனிற் கூர்மை
செய்யதிலை இல்லையென்பால், சிந்திக் கின்ற
திறமையதோ செயலிழக்க அறத்தை நீக்கிப்
பொய்யதனை மெய்யாக்கும் சீதா நெஞ்சில்
புகுத்திவிட்டேன் வாளதனை சபையி லுள்ளோர்
மெய்யான நடிப்பென்றார் முதலில், பின்னர்
வெள்ளமெனப் பெருகிவரும் குருதி கண்டார்.

பார்த்தவர்கள் நடுங்கிவிட்டார், பாவி யென்றே
பகர்ந்தார்கள் பரபரப்புக் கூடிக் கொள்ள
ஆர்த்தெழுந்தார் ஆனாலும் என்நெஞ் சுற்ற
ஆத்திரத்தைக் கண்டச்சம் அடைந்தார், மேனி
வேர்த்தொழுக மேடையினைப் பார்த்தேன் சீதா
விழுந்துகிடக் கின்றாளாம் குருதிக் குள்ளே
கீர்த்தியெலாம் இழந்துவிட்ட கீழோ னானேன்
கேடதனுள் கூடியின்று கூடே யானேன்.

கூட்டமங்கே குலைந்ததையா குருதி வெள்ளம்
கொப்பளிக்க அவன்கிடக்கக் கமல நாதன்
ஆட்டத்தை விட்டெங்கோ ஓடி விட்டான்
ஆத்திரமும் அடங்கிவிட, அறிவு கெம்ப
வாட்டமுளம் சூழ்ந்ததையா, அந்த வேளை
வந்தார்கள் காவலர்கள் என்னை பார்த்து
கூட்டமெலாம் பரிகசிக்க விலங்கை மாட்டிக்
கொண்டுசென்றார் குற்றமுள்ள கொடியோன் என்னை

குற்றத்தை நானுமங்கே மறுக்க வில்லை
குமுறுகிற உள்ளத்தின் நிலையைச் சொன்னேன்
குற்றத்துக் குரியதண் டனையை ஏற்கும்
குறியோடு நீதிமன்றில் நின்றேன், என்மேல்
பற்றுற்றார் எல்லோரும் பழிக்க நீதி
பரிமளிக்க நீதிபதி என்னைப் பார்த்துக்
"குற்றமுள்ள உனக்கிங்கே ஆயுட் கால
கொடுஞ்சிறையாம்" என்றிட்டார் கலங்க வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையினிலே தள்ளிவிட்டார் செய்த குற்றம்
தேடியங்கு தந்துவிட்ட தண்டம் கொண்டேன்
குறையிங்கே எவர்மீதும் இல்லைப் பொல்லாக்
கொடுமைக்கே விதிதானே கோலைச் சொல்லும்
கறைகொண்ட மனிதர்களால் நிறைவு கொண்டார்
கனன்றுவரும் சினமுற்றே துன்பங் கொள்ளும்
முறையெங்கும் உளதாம்நாம் இதனை மாற்ற
முடியாதாம் முயல்வதிலும் அர்த்தமில்லை.

ஆண்டுபல கிடந்துழன்றேன் சிறையில், நெஞ்சை
அரிக்கின்ற நினைவென்னும் கிருமி என்றும்
தோண்டிடுமாம் துயரத்தால் முன்னைக் கால
சுகம்வந்தே கனவாகி அழியும்; ஆனால்
ஈண்டுற்ற நியதியினை இழித்துப் பேசி
இருப்பதிலே ஒன்றுமில்லை ஐயா இங்கே
மீண்டசுதந் திரங்கண்டே நானும் வாழ
விருப்புற்று வெளிவந்தேன் பயனோ இல்லை.

காலமது கடுவிரைவாய்க் கழிய எங்கும்
கதுவியுள மாற்றத்துக் களவுண் டாமோ?
பாலரெலாம் பக்குவமாய் வளர்ந்து விட்டார்.
பல்விழுந்தே கிழமானார் இளைஞர் எல்லாம்.
காலமதோ கூருளியைக் கொண்டே என்றன்
கட்டமைந்த உடலினையே குடைய நானும்
கோலதனைத் தஞ்சமெனக் கொண்டேன் கூனிக்
குறுகியுடல் பாரமெனக் கண்டேன் இன்றே.

சுதந்திரமாய் விடுதலையே கிடைக்கு மானால்
தொல்லுலகில் அமைதியுளம் பிறக்கு மென்றும்
இதந்தரும்நல் வாழ்வதனைத் துய்த்தே இன்பம்
எய்திடலாம் என்றும்நான் கனவு கண்டேன்;
பதமிழந்த உடலிங்கே பார மாகி
பாரகத்தில் சீரற்றுப் போனால் எந்த
விதம்வாழ முடியுமையா? மெய்யாய் நானோர்
வெறுங்கூடாம்; விழலான நீராம்; பாரீர்.



கரும்பதனை ஆலையிலே இடுவார் அந்தக்
கரும்புதரும் சாறதனைப் பிழிவார், சக்கை
விரும்புபவர் எவருண்டு? யாரும் இல்லை
வெறுமையுற்ற சக்கையென ஆனேன் என்றன்
இரும்பான உடல்நிதமும் பாடு பட்டே
இளைத்துழைத்துச் சதைவடிந்தே எலும்பாயிற்றும்
துரும்பென்றும் மதித்திடுவார் இல்லை, அந்தோ
சோதனையின் பாதகத்தை நன்றே பாரீர்!

உலகத்தைத் தெளிவாக நோக்கும் போதிங்
குயிருள்ள மனிதனைப்போல் வேறொன் றில்லை!
உலகுற்ற உயிரினங்கள் மேலாம் என்னும்
உண்மையினை ஓர்ந்திடலாம், மற்று முள்ள
நிலைகுலையாப் பொருள்களெலாம் மாற்றத் தாலே
நேருற்றுச் சீருற்று நிலைத்தல் ஆகும்
பலமுற்ற மனிதன்தன் பாராயம் போனால்
பாருக்கே பாரமதாய் ஆகல் வேண்டும்.

உடைந்துவிட்ட உலோகத்தால் ஆன பண்டம்
உலையினிலே உருகிப்பின் ஒளியும் கொள்ளும்
படைத்திடுவார் அதனைவே றொன்றாய் மண்ணால்
படைத்திட்ட பாண்டமிங்கே உடைந்து விட்டால்
படைப்புக்குப் பயனவை தில்லை இந்தப்
பாரதிலே மனிதனுமோர் பாண்டம் மீண்டும்
உடைந்துருக வொண்ணாத உடைந்த பாண்டம்
உடலென்ற கூட்டோடு உலவு கின்றேன்.

இச்சகமே பேசியென்றும் இரந்தன் பில்லார்
இல்லடைந்து முதுமையுடன் இச்ச கத்தில்
பிச்சைபெற்று வாழ்வேனோ? பிறரின் கையைப்
பேச்சாலே இளக்கிஉயிர் மூச்சை வைக்க
நச்சுவனோ? நானென்ன செய்வேன் நாளை
நமைத்தொடரும் யமன்இன்று வருவா னானால்
பிச்சையென என்னுயிரை அவனுக் கீவேன்
பேருலகில் ஓருருவம் இல்லா தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதை நிறைவுற்றது

விதியென்ன கதையதனை வைத்த தாமோ
விளங்கிடுமா? ஆற்றலது இல்லை ஐயா!
மதியற்றுக் கதியற்றே வருந்தும் என்பால்
மட்டற்ற அன்புற்றுக் கதையைக் கேட்டீர்
புதிதுற்ற கருத்தென்றன் வாழ்வில் உண்டா?
புதுமைக்கோர் வித்துமிதில் இல்லை நேரம்
விதியுற்று கழிந்திருளாய் ஆகிற் றையா
விடைதாரும் என்றவனும் எழுந்து போனான்.

விடைகொண்டான் அம்மனிதன் விதியே காட்டும்
விதிக்கமைந்த மதிகொண்டே எங்கோ நோக்கி
நடக்கின்றான் திரும்பியவன் பார்க்க வில்லை
நாட்கடமை தீர்த்துவிட்டான், பரிதி, பூவில்
படர்கின்ற இருளினிலே இருளாய் ஆகிப்
பார்வைக்கே எட்டாத தொல்லைக்கே சென்றான்.
அடக்கிடவே முடியாத சோகத் தோடு
அண்ணாந்து பெருமூச்சு விட்டேன் நானும்.

சொல்லியஅம் மனிதனது கதையிற் தோய்ந்த
சோகத்தை வரைகட்ட முடியு மாமோ?
பல்லாண்டாய் பயனிழந்து பார கத்தில்
பாரமென அன்பென்ற வேரு மற்று
சொல்லரிய சோதனைகள் சூழ இன்று
துரும்பான அவன்கதையை இன்றை நாளில்
பல்லாண்டாக் கலைகளுக்கே அடிமை யாகிப்
பாடுற்ற பலரிடத்தே காணு கின்றேன்.



நாடகத்தில், நல்லிசையில், கலையில் வல்லார்
நாடதனில் நல்லபுகழ் நண்ணி ஓர்நாள்
பீடுற்று வாழுவது சாலும்; ஆனால்
பெருமையெலாம் வறுமையினால் வற்றி விட்டால்
தேடுபவர் ஒருவரில்லை; தேய்ந்து தேய்ந்து
சீரற்றுச் செருப்பானால் எறிவா ரன்றி
நாடுபவர் உண்டாமோ? நாளும் கண்டே
நான்துயரில் ஆழ்ந்ததனை அவனிற் கண்டேன்.

முடிவென்ற ஒன்றுண்டாம் ஆனால் அந்த
முடிவுக்கும் முதலுக்கும் எல்லை யற்ற
கடவுளுக்கே இவ்வுண்மை தெரியு மன்றி
கலியுகத்தில் மெலியுமெனக் கென்ன தோன்றும்?
விடைகொண்டு செல்கின்றான் விடையு மாகி
விடிவற்ற வாழ்வுக்கோர் படிவ மாகி
படிகொண்ட அம்மனிதன், கலையி னாலே
பண்பட்ட உண்மையினை மறக்க லாமா?

இருளழுக்குப் பரவியது எழிலாய்க் கண்முன்
இலங்கியவை எங்குற்ற தென்னும் நெஞ்சப்
பொருளுக்கு விடையென்ன? உண்டு; கண்ணும்
புலனாலே உணராமல் போன யாவும்
இருளுண்ணும் இரவியவன் நாளை வந்தால்
எழிலாகத் தெரியுமன்றோ! உண்மை இங்கே
மருளான மனத்திற்குத் தெரியா விட்டால்
மறைந்ததென உரைப்பதுவும் மடமை யாகும்.

அன்னையிலாப் பாலகனாய் அல்லற் பட்டே
அணையாத கலைத்தாகம் உளத்தை உந்த
என்னென்ன! இம்சைகளுக் குட்பட் டுள்ளான்
எண்ணமனம் புண்ணாகும் வாழ்க்கை அந்தோ
புன்னெறியே யில்லாதிப் பூவில் பூத்தோர்
புண்ணியத்தில் கண்ணியத்தில் பற்று வைத்தால்
துன்னிநிறை விலங்கிநிற்கும் மனதிற் கொள்ளீர்
தூய்மையதால் துலங்கவழி காண வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்தந்த காற்றுலே உடலின் வாதை
கழிந்ததுவாம், ஆனாலும் நான்முன் கண்ட
உடலிருந்தும் உயிரிருந்தும் வாழ்வு காணு
துடைந்துவிட்ட நிலையினிலே உள்ளோன் உள்ளம்
இடமுற்றுன்; எண்ணத்தில் இருந்தான். இந்த
எழிலார்ந்த காவியத்தின் கருவு மாணுன்
திடமான செந்தமிழில் அவனை வைத்தேன்
சிந்தையிலே வைத்துநெறி தெரிந்து கொள்வீர்.

ஆங்குள்ள மணலிலிருந் தெழுந்தேன் பொல்லா
அந்தகனின் வண்ணமெனும் இருளுக் குள்ளே
"நீங்காத ஒன்றுண்டு நித்தம் நெஞ்சில்
நிறுத்துபவர் நிலைபெறுவார் மனிதா! நீயும்
ஈங்கதனை மறந்துவிட வேண்டாம்" என்றே
எனக்கோத முனைந்ததுபோல் கடலும் ஓங்கி
"ஓங்காரம்" இசைத்திடவவ் வொலியைக் காதின்
உள்ளேகொண் டேநடந்தேன் உண்மை கண்டேன்.

நிறைவு

★ ★

உ

# நமஸ்காரம்! இதோ:
# ஓஹோ சவர்க்காரம்

ஓஹோ சவர்க்காரம் — உங்கள்
உடைகளை ஒளிசெய்யும் — நமஸ்காரம்!

ஆகா இது புதுமை — உடை
அழுக்கினைப் போக்கியே தரும்மகிமை.

சீ. எஸ். கே. தாபனத்தார் — நல்ல
சிறப்புடன் செய்திடும் சவர்க்காரம்

நீலம் வெள்ளையுடன் — நுரை
நிலைத்திடும் "பார்சோப்" எனும்வகையில்

ஓஹோ சவர்க்காரம் — உங்கள்
உடைகளுக் குகந்ததாம் உளங்கொண்டே

வாங்கியே பாவியுங்கள்! உடை
வனப்பினை நாளும் உயர்த்திடுவீர்

பாங்காய் நுரைத்திடுமாம் — உடை
பாலினைப் போல்வெண்மை அடைந்திடுமாம்
ஓஹோ சவர்க்காரம்

**சீ. எஸ். கே.**

பெரியகடை — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடு பெருமைகொள்ளும்
## நல்ல தொழிற்சாலை

சீமா பட்டுத் தொழிற்சாலையைத்
தேடிச் செல்லுவோம்
சீர்மிகுந்த சேலை வேட்டி
'சேட்டிங்' கொள்ளுவோம்
நாமுவக்க நல்லதுணி
நாடிச் செய்குவார்
நாடுவக்க நல்லபணி
நாளும் கொள்ளுவார்
மங்கை யுள்ளம் நாடும்எழு
வர்ணச் சேலைகள்
பொங்கும் புதுமை மெருகினோடு
பொலியச் செய்குவார்
செயற்கைப் பட்டில் தேர்ந்த வற்றை
தெரிந்திங் காக்கியே
வியந்து நாங்கள் விரும்பிக் கொள்ள
நயந்து நல்குவார்
யாழ்ப்பாண திருநெல்வேலி
இலங்குந் தாபனம்
யாழ்ப்பாணத்தின் திறமைதன்னை
நாட்டுந் தாபனம்
மங்கையர்தம் கைவனப்பில்
மலரும் தாபனம்
இங்கிதற்கோர் இணையும் ஈடும்
இல்லை யாகுமே
கைத்தறியில் ஆனநல்ல
கலையு டன்உயர்
மின்தறியின் மேன்மைகொள்ள
விரைந்து செல்லுவோம்

**சீமா பட்டுத் தொழிற்சாலை**

திருநெல்வேலி — **யாழ்ப்பாணம்**

## நல்ல நூல்கள்
## வாங்குவதற்கு

நல்ல நூல்கள் வாங்குதற்கு
நாட்டம் கொள்ளுவீர்
நாட்டில் லங்கா தாபனத்தை
நாடிச் செல்லுவீர்
தெய்வேந்திரர் தலைமை
திகழும் தாபனம்
சீரினோடு பேரினோடு
இலங்குந் தானம்

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

காங்கேசன்துறை வீதி :: **யாழ்ப்பாணம்**

★

## பாத அணிக்கோர்
## கோல் ஸ்டோர்ஸ்

இலங்கை நாட்டில் முன்னணியில்
இலங்கும் கே. எம். எஸ். என்னும்
நலமாரி பாத அணிகளையே
நாடிக் கொள்வீர் நயவிலைக்கே
எங்கள் யாழ்நகர்
கஸ்தூரியார் வீதிக்கண் உள்ளதுவாம்
கோல்ஸ்டோர்ஸ் தனையே மனங்கொண்டே
கொள்வீர் பாத அணிகளையே.
இலங்கையின் பாத அணிகளையே
இங்கே எவரும் பெற்றிடலாம்
நலமுறத் திகழும் கோல்ஸ்டோரை
நாடிடு வீர்பயன் பெற்றிடுவீர்.
தொழிலில் வல்லோர் திறமையெல்லாம்
துலங்கும் யாழ்கோல் ஸ்டோரதனில்
அழகில் அமைப்பில் தனிப்பெயரே
அமைந்த ஆக்கம் உற்றதுவாம்
வதிரித் தயாரிப் பினையும்நீர்
வாங்கிடலாம் உடன் வருவீரே.

**கோல் ஸ்டோர்ஸ்**

கஸ்தூரியார்வீதி :: **யாழ்ப்பாணம்**

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றெக்ஸ் டியூட்டரி

வர்த்தகம் கணக்கியல் விஞ்ஞானம்
மாணவர் உளத்தில் வளர்ந்திடவே
கற்றிட யாழ்ப்பா ணத்திலுள
காங்கே சன்துறை வீதியிலே
றெக்ஸ் டியூட்டறியே உள்ளதுவாம்.
தேடியே செல்வீர் மாணவர்காள்
(எவர்சில்வர் ஹவுஸ் மேல்மாடி)
230, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்

★

நம்நாட்டு எழுத்தாளர்
இலக்கி யங்கள்
நம்மவரின் வாழ்வினுக்கே
வழிகாட் டட்டும்

## எலக்ரோலக்ஸ்

காங்கேசன்துறை வீதி சுன்னாகம்

★

பல்கட்டப் கண்ணைப் பரிசோதித்துநற்
பார்வை தரும் கண்ணாடிபெற
நல்லவர் வல்லவர் பர்ணாண்டோவிடம்
நாடியே நாங்களும் சென்றிடுவோம்.

பதிவு இல :4874

## பி .ஐ. பெர்ணண்டோ

51 மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

★

ஆவியே பிரியும் வேளை அறத்தினை வழங்கிக் கர்ணன்
பூவினில் இலையென் போரை புரந்திடும் இதயம் கேட்டான்
ஆவியே பிரிந்திட் டாலும் அமைவுற கலைகள் மீண்டும்
மேவிய மேன்மை வேண்டும் விடிவெமக் கிதனால் உண்டாம்.

கல்வி, கலை, கலாச்சாரக் காப்புக் கழகம்
யாழ்ப்பாணம்

★

## மனமுற்றூர்
## மாசிலாமணி

கன்னற் றமிழின்
காதலி லே
கட்டுற் றன்பைக்
காட்டியிங்கே
இன்நூல் தன்னை
உரு வாக்க
இசைந்த உதவி
தந்தவரெம்
மாசில் லாமணி
பெய ரதனை
மனதில் வைத்தே
நாம்நிதமும்
காசினி தனிலே
அவர்நாமம்
கவினுற வாழ
வாழ்த்துவமே

## வே. க. மாசிலாமணி

110 புங்கங்குளம் வீதி : : யாழ்ப்பாணம்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல பிடவைக்கு ஒரு தாபனம்

நல்லரகப் பிடவைகட்கும்
நம்பிக்கை யோடு
நாணயத்திற் குஞ்சிறந்த
தாபனமாய் விளங்கும்

↓

**த. குமாரசாமி**
பிடவை வியாபாரம்

பெரியகடை : : யாழ்ப்பாணம்

★

## மூத்த தனி அச்சகம்

அச்சகத்தில் சிறந்த வொரு அச்சகம்
ஆண்டுகளால் மூத்த தனி அச்சகம்
மெச்சிடவே அச்சு வேலை செய்யவே
விரும்பு வோர்க்கு இனியதான அச்சகம்
சண்முக நாதப் பெயரை உற்றது
தக்கவரின் நன்மதிப்பைப் பெற்றது
உண்மையான செயலி னூலே திகழ்வது
வருபவர்க்குப் பயனைக் காட்டி மகிழ்வது

**சண்முகநாத அச்சகம்**

336-340 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்

★

## சாமி அன் சன்ஸ்

திருமண வைபவக் கொண்டாட்டமுடன்
பெருமை யுறும்நல் விழாக்களுக்கு
அருமையுறும் எவர் பித்தளைப் பாத்திரம்
வாங்கிட நல்லதோர் தாபனமாம்.

161, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

★

## கல்வி நிலையம்

ஆங்கிலம் கணக்கியல் தட்டெழுத்து
அமைப்புறு பொருளியல் சுருக்கெழுத்து
பாங்குற வர்த்தகம் பயின்றுயர்ந்தே
பயன்பெற நல்லதோர் கல்லூரி
ஸ்ரீமீ னாட்சி திருநாமம்
திகழும் உயர்ந்த கல்லூரி
சிறப்புற யாழ்நகர் அமைந்துளதாம்
தேடியே செல்வீர் மாணவரே.

38—40 சீனிவாசகம் வீதி யாழ்ப்பாணம்

★

எங்கள் எழுத்தாளர்களின் படைப்பே இந்த
ஈழத்தின் நேசத்தை இணைக்க வேண்டும்.

↓

யாழ்ப்பாணம் **கே. டானியல்**
எழுத்தாளர்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்றறிவேண்டுமா ?

எஸ் .டி. விஸ்வலிங்கம் அன்சன்
என்னும் தாபனத்தை எய்திடுவீர்
இஸ்ட முடன்மோட்டார் தனை
இயக்கும் பற்றிகளை பெற்றிடலாம்.
பற்றறி சேர்வீசுடன் அதை
வாகுபெற சார்ஜிங் செய்திடலாம்
பற்றுடன் சென்றிடுவீர் பற்றி
பெற்றிடுவீர் பயன்உற்றிறிடுவீர் !

### எஸ். டி. விஸ்வலிங்கம் அன்சன்

50 மானிப்பாய் வீதி * யாழ்ப்பாணம்

## என் இதயம்

என்றும் எங்கள் வாழ்வாகி
என்றும் மூச்சுப் பேச்சாகி
ஒன்ருய் ஓங்கி உலகத்தில்
ஒருமை கண்டு கலைகளுடன்
நின்று நிலைத்த தமிழான
நேசத் தாயின் பதம் போற்றி
என்றும் உழைப்போம் இதுவே நம்
இலட்சியம் ஆகும் எனக்கொள்வோம்

க. லோகநாதன் 3ம் வட்டாரம்
* புங்குடுதீவு

## நம் வைத்தியர்

வைத்தியமும் சோதிடமும் மாண்பு மிக்க
மாந்திரிகம் எனும்கலையும் அறிந்த சீலன்
சிந்தத்தை நன்நெறியால் திகழ வைத்தே
தினம்வருந்தும் பிணியாளர் பிணியைத் தீர்த்து
இத்தரையில் இயல்புபெறச் செய்ய வல்லோன்
எம் டாக்டர் சண்முகரா ஜாவின் சேவை
நித்தியனின் அருளாலே சத்தி யம்போல்
நிலைபெற்றுப் புகழுற்றே வளர்க வாழி !

டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி.

ஞானபண்டித வைத்தியசாலை
நடராஜா வீதி
கொக்குவில்

*

" நல்ல இலக்கியங்கள்
நாட்டின் நலங்காட்ட
வல்ல வழிசெய்து வாழவைப்போம். "

### யாழ்ப்பாணம் எலக்றிக்கல்

இல : 6 ஸ்டான்லி வீதி : யாழ்ப்பாணம்

*

" எங்கள்நாட் டிலக்கியங்கள் இனிது வாழி "

ரீபன்சி பரடைஸ்
சுன்னுகம்

*

யாழ்ப்பாணம் பார்மஸி
91, மின்சார நிலையவீதி
யாழ்ப்பாணம்

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நொதேர்ன் இன்டஸ்றீஸ்

டயரை நிரப்பிடவும் — அதை
நல்ல முறையினிற் புதுப்பிக்கவும்
உரியதோர் தாபனமாம் — எங்கள்
நோதேர்ன் இன்டஸ்றீ உணர்ந்திடுவீர்
உயர்ந்த றப்பரினுல் — மோட்டார்
உதிரிப் பாகங்களைச் செய்வதிலும்
நாட்டிற் கொருதாபனம் — நல்ல
நாணயத்தி ஞலென்றும் ஓங்குந் தாபனம்.

ஸ்டான்லி வீதி யாழ்ப்பாணம்

## சுந்தரமான இந்திர பவனம்

சுன்னுகச் சந்தியிலே உள்ள தாபனம்
சுகந்தமான பானங்களுக் குகந்த தாபனம்
தேவையான பொருட்களையும் தெரிந்து கொள்ளலாம்
தேடிவந்தே நாடியதை வாங்கிக் கொள்ளுவீர்

உரிமையாளர் : ச. சுந்தரம்

கே. கே. எஸ். வீதி சுன்னுகம்

## நம் நாட்டுப் பொருட்களை நாம் ஆதரிப்போம்

உள்நாட்டுப் பொருட்களை
ஊக்குவிப்ப தெங்கள்கடன்
உள்ளந்தனிலே கொள்ளுவோம் - அதை
உள்ளந்தனிலே கொள்ளுவோம்

கண்ணுடிப் பொருட்களை
என்னுளும் பெற்றிடவே
கண்ணுடி ஆலைசெல்லுவோம் - பெனிசுலா
கண்ணுடி ஆலைசெல்லுவோம்

உரமான போத்தல்வகை
ஒளிகாட்டும் சிம்னிவகை
தரமான கிளாசுவகையை
உண்டாக்கித் தேவைகளை
நன்ருகப்பூர்த்தி செய்யும்
கண்ணுடித் தொழிற்சாலையே - பெனிசுலா
கண்ணுடித் தொழிற்சாலையே

வெளிநாட்டுப் பொருட்களுக்கு
வீணுய் விலைகொடுத்தல்
வெட்கக்கேடான செயலே - நல்ல
தொழிலாக்கம் பெற்றிடவும்
பொருளாக்கம் உற்றிடவும்
தொண்டுசெய்தல் எங்கள்கடனே - உயர்
தொண்டுசெய்தல் எங்கள் கடனே

## பெனிசுலா கண்ணுடித் தொழிற்சாலை

25, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவையர் புன்னகை பூக்கும்
## பொன், தங்க, வைர நகைகள்

ஏகேஎஸ் மாளிகையை நாடுங்கள் - நீவிர்
எழிலாக நகைகளினைத் தேடுங்கள்
வாக்கில் சிறந்தவுயர் வர்த்தகம் - நல்ல
வைரத்திலும் வைரமானதே

அரைநூற்று ஆண்டுகால சேவையே - என்றும்
அழகூட்டும் நகைகள் தந்தமேதையே
உரைகாட்டும் தங்கவைர நகைகளே - மக்கள்
உளம் பூக்க ஏகேஎஸ் உதவுமே

புதிய புதிய அமைப்புகளில் பூக்குமே - உங்கள்
புன்னகையும் பொன்னகையால் பொலியுமே
முதியவர்க்கும் இளமை தன்னை கொடுக்கவே
முத்து வைரத்தங்க நகையைக் எடுக்கவே!

ஏகேஎஸ் மாளிகையை நாடுங்கள் - நீவிர்
ஏகேஎஸ் மாளிகையை நாடுங்கள்.

**ஏ. கே. எஸ். அன் சன்ஸ்**
63, 65, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

டயல்: 519

[illegible] மது
## றேடியோஸ்பதி

வானொலி ம[illegible]கூடு - கைக்
கடிகார [illegible] பழுதடைந்தால்
றேடியோ[illegible] பதிதனையே - நீங்கள்
தேடியே [illegible]வற்றை சீர்செய்குவீர்
றெப்[illegible]கோட் உடன் - அவற்றின்
தொ[illegible]ர்புடைய பெரும் பொருட்களையே
[illegible] வாகமுடன் - நிதம்
[illegible] மனம்நிறைய திருத்திடலாம்
காலந் தவருமல் - கூலி
கணக்குடன் எடுத்தவர் திருத்திடுவார்
வேலைத் திறன்மிக்கோர் - எங்கள்
யாழ்ப்பாணம் றேடியோஸ் பதியினரே
யாழ்ப்பாணம் கஸ்தூரியார் - வீதி
ஐம்பத்தெட் டெண்ணையே யுடையதுவாம்
றேடியோஸ் பதியடைவீர் - உங்கள்
தேவைகளைப் பூர்த்திசெய் திடுவீர்
பூவதியாம் உரிமை யாளர்
அவர்திறமை இந்த நாடறியும்
தேவைப் படும்போது - நீவிர்
றேடியோஸ் பதிதனை தேடிவருவீர்
நிதான கூலியினுல் - நிதம்
நெஞ்சமதில் நிறைவு பெற்றிடுவீர்
இதனைமறவாதிர் உங்கள்
எணணந் தனிலிதனைவைத்திடுவீர்.

**றேடியோஸ்பதி**
58, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம் நமக்கு வேண்டும்

ஞானம் நமக்குறவே - தினம்
நாடியே நல்லநல்ல நூல்படிப்போம்!

ஞான சுரபியெனும் - நாமம்
நவிலும் புத்தக நிலையந் தனுக்கே
தேடிநாம் சென்றிடுவோம் - அங்கே
சிந்தைக் குகந்தநூல்கள் தெரிந் தெடுப்போம்

பள்ளிச் சிறுவர்கட்கும் - நல்ல
பக்குவம் உற்றிடவே நூலுளதாம்
உள்ளம் உயர்வுபெற - கல்வி
ஊக்கத் துடனேநிறை வாக்கமுற

பாட உபகரணம் - இங்கே
படிப்புக் குகந்த தேவைப் பொருளனைத்தும்
நாடி நயவிலைக்கே - நிதம்
நாங்கள்பெற்றே அறிவில் ஓங்கிவருவோம்

அரசினர் வெளியீடு - ஈழத்
தறிஞர் பெருமக்கள் அறிவுரைகள்
உரிய விலையினிலே - பெற
ஓடியே சென்றவற்றைத் தேடிப் பெறுவோம்.

**ஞானசுரபி புத்தகக் கம்பனி**
237, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழும் சைவமும் தழைக்கும் மனம்

சைவநெறியும் செந்தமிழும்
இசைந்தவுளம் கொண்டோன்;
சீர்மைபெறும் இலக்கியத்தைச்
சிந்தையினில் வைத்தோர்
கவனத்தை கவருகின்ற
கண்ணியனும், அன்புக்
கனிவூறும் நகைமுகத்தில்
பொலிவுற்ற நண்பன்;
தவமிசைந்த நுணாவிலெனும்
பதியினிலே பூத்தோன்
தக்கதிரு மார்க்கண்டர்
அன்புடனே யான்செய்
நவமிசைந்த இந்நூலும்
அச்சாக்கம் பெறவே
நன்றிதனை ஈந்துவந்தான்
நற்றமிழ்போல் வாழி!

**வி மார்க்கண்டு**
மட்டுவில் - தெற்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிக்கரம்

வந்தாரை முகம்மலர வரவேற் றன்பு
வார்த்தைதரும் காரைநகர் களபூ மிக்கண்
சிந்தைசிவம் ஒன்றுகுலத் துதித்த சீலன்
திரு ச. வி. முருகேசர் அன்பு கூர்ந்தே
இந்தஎழில் நூலாக்கம் எய்து தற்கே
இசைந்தீந்தார், அவர்சேவை தமிழ்போல் யாண்டும்
சந்தமுற வாழியென வாழ்த்து கின்றோம்
சந்ததமும் அருளவரின் உரிமை யாகும்!

**ச. வி. முருகேசு**
**களபூமி, — காரைநகர்.**

## மருந்துக்கடை

ஆங்கிலேயர் மருந்துடனே ஆயுள்வேத மருந்துகள்
வாங்க ராஜா மெடிக்கல் ஸ்டோரை
மனதில் வைத்துக் கொள்ளுவீர்
சுன்னுகத்துச் சந்தைச்சந்தி துலங்கு மிந்தத் தாபனம்
என்னாளும் நம் சேவைக்காகும்
என்றுளத்தில் கொள்ளுவீர்
ராஜா மெடிக்கல் ஸ்டோஸ் — சுன்னுகம்

## அழகுப் பிடவைக்கு . . .

அஜந்தாஸ் பிடவை மாளிகை - நூற்றி
அறுபத்திரண்டு கே கே எஸ் வீதி
அஜந்தாஸ் பிடவை மாளிகை
புகழ்மிகு புஷ்பராணி ஸ்டோரும்
கிளையெனப் பொலியும் ஸ்தாபனமாம்

**அஜந்தாஸ் பிடவை மாளிகை**
**162, கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**புஷ்பராணி ஸ்டோர்ஸ்**
**பாங்ஷால் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## நல்ல பிடவைக்கு ரவிந்திரா!

நாடியே நீவிர் சென்றிடுவீர் எங்கள்
ரவிந்திரா றேடேர்ஸ் தாபனத்தை
தேடி யுமக்காகும் நல்ல பிடவையை
நியாம விலையினில் பெற்றிடுவீர்
கொழும்பு செட்டியார் வீதியிலே மனம்
கொள்ளும் உயர்ந்த பொருட்களுடன்
அழகுறு தாபனமாக விளங்கிடும்
அற்புதம் கண்டு பொருள் பெறுவீர்!

**ரவீந்திர றேடேர்ஸ்**
**112, செட்டியார் வீதி,**
**கொழும்பு - 11.**

## கலை விருந்தூட்டும் கண்ணுடி, படங்கள்

ஜன்னல்நிலைக் கண்ணுடி யாவும்
இங்கு தேவையெனில்
ஜெஸிமா பிக்சர் பலஸை
தேடியுமே சென்றிடுவீர்
படம் பிறேம் பண்ணிடலாம்
பக்திதரும் சாமி படம்
குடிபுகுதல் படத்துடனே
வாழ்த்துமடல் பெற்றிடலாம்
யாழ்ப்பாணம் கே கே எஸ்
வீதியிலே அமைந்துள்ள
ஜெஸிமா பிக்சர் பலஸை
சிந்தையிலே வைத்திடுவீர்!

**ஜெஸிமா பிக்சர் பலஸ்**
**222, கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்கு எவை தேவை?

தேவை யுற்றதை பெற்றிடவும்
தேவை யற்றதை விற்றிடவும்
பாவனைப் பொருள் பரிமளித்திடும்
நிகோந நிலையம் - நம்
நிகோந நிலையம்
விற்பனை செய்திடக் கொடுக்கும் பொருட்கே
வேண்டும் பணம் கிடைக்கும்
அற்புதமான பொருட்களி னுலகம்
அழகு பெறத் திகழும்
அழகு பெறத் திகழும்

**நிகோந ஏல நிலையம்**

உரிமையாளர்: V. நரசிங்கம் J. P
1 ம் மாடி, சங்கரப்பிள்ளை கட்டிடம்
166, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.

## நாடக வேந்தர் பூந்தார்!

நாடகத்தினை நாட்டினில் ஊக்கிய
நல்ல பெரும் கலைஞர் - நம்
நாடறிந்த கலைப் பீடறிந்தார் - இவர்
நாட்டிற் தனிமனிதர்
'பூந்தார்' எனும்புகழ் பட்டமுற்றூர்கலை
பூக்கும் உளமுடையார் - உயர்
வேந்தரெனும் வேடம் கொண்டிடுவாருளம்
வீற்றிருக்கும் பெரியார்
ஆசை தமிழிலும் உற்றவர் சேவையால்
ஆய கலாநிதியாம் - திரு
யோசேப் எனுமிவர் சேவையை நாம்நிதம்
வாழ்த்தியே ஊக்கிடுவோம்!

**ம. யோசேப்பு**

கன்னுதிட்டி — யாழ்ப்பாணம்.
சுண்டிக்குளி — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org